பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 29 திங்கட்கிழமை (15.09.2003) தொலைபேசி - 2223378 ஒலி 270

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# புலிகளின் வசமுள்ள திருமலையை கடற்படையினர் மீட்க வேண்டும்

## அமெரிக்க இராணுவக் குழு ஆலோசனை

(கொழும்பு)

புலிகள் வசமிருக்கும் திருகோணமலையின் தென்பகுதி நிலப்பரப்பு படையினரால் பாதுகாக்கப்பட வேண்டும்.கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இத் துறைமுகம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், திருகோணமலையின் தென்பகுதி படையினரது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படுவது தவிர்க்க முடியாததென்று அமெரிக்க இராணுவ உயர் அதிகாரம் உடைய இராணுவக் குழுவொன்று தெரிவித்துள்ளது.

இப் போதுள்ள நிலையில் இலங்கைக் கடற்படையுடன் புலிகளை சமமாக ஒப்பிடத்தக்க நிலைமை காணப்படுகின்றது.இந் நிலையில் இப்பகுதியின் கட்டுப்பாட்டை படையினர் வைத்திராவிட்டால் திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பு இழக்கப்பட வேண்டி வரலாம் என்றும் அக்குழு எச்சரிக்கை செய்துள்ளது.

அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தின் 26 உறுப்பினர்களைக் கொண்ட இக் குழு கடந்த ஆண்டு செப்ரம்பர் 30 தொடக்கம் ஒக்ரோபர் 10 வரை இலங்கையில் இருந்து அக் குழு திருகோணமலையின் இராணுவம், கடற்படை, விமானப்படை தொடர்பான திறன்கள்,

(10ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் இராஜிநாமா

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் பி.என்.ஜி விஜயவீரா தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

பேராசிரியர் விஜயவீராவின் இராஜிநாமா கடிதத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஏற்றுக் கொண்டுள்ளதுடன் அவரது இராஜிநாமா தொடர்பாக அரசியல் அமைப்புச் சபையின் தலைவருக்கு கவலை தெரிவித்து கடிதம் ஒன்றையும் எழுதி அனுப்பியுள்ளார்.

பொலிஸ் ஆணைக் குழு உறுப்பினர் ஒருவர் பேராசிரியர் விஜயவீராவுடன் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டமையினாலேயே அவர் இராஜிநாமாச் செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. (வ)

# விடுதலைப் புலிகள் தயாரித்த இடைக்கால சபைக்கான வரைபு இம் மாத இறுதிக்குள் கையளிப்பு!

## சு.ப.தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

(கிளிநொச்சி)

**இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும், சர்வதேச சட்ட வல்லுநர்களும் பரிஸ் நகரில் கூடித் தயாரித்த இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு இம் மாத இறுதியில் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

## யப்பான் தூதுவர் அகாஷி தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

ஜப்பான் விசேட தூதுவர் யசூஷி அகாஷி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச செல்வனை நேற்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கை விமானப் படைக்கு சொந்தமான விசேட ஹெலிகொப்டர் மூலம் யப்பானின் இலங்கைத் தூதுவர் ஒட்சுகா சகிதம் கிளிநொச்சி பொது மைதானத்தை வந்தடைந்த விசேட தூதுவர் யசூஷி அகாஷியை விடுதலைப் புலிகளின் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கனும், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் வரவேற்றார்கள்.

(10ம் பக்கம் பார்க்க)

ஜப்பான் விசேட தூதுவர் யசூஷி அகாஷியை கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகத்தில் நேற்று சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போதே விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச்செய்தியாளர் சந்திப்பின் போது யசூஷி அகாஷியிடம் வற்புறுத்தி கூறியுள்ள விடயங்கள் தொடர்பாக மேலும் தெரிவித்திருப்பதாவது,

யப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷியை நேற்று சந்தித்த

(10ம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபனின் 16-ம் ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று ஆரம்பம்



தியாகி லெப். கேணல் திலீபனின் 16ம் ஆண்டு நினைவு தின நிகழ்வு

...கள் இன்று தமிழர் தாயகத்தில் எழுச்சி பூர்வமாக ஆரம்பமாகின்றன.

1987 ஆம் ஆண்டு ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 12 நாட்கள் நீராகாரம் எதுவுமின்றி உயிர்த் தியாகம் செய்த தியாகி திலீபனின் நினைவு தின ஆரம்ப நாளான இன்று காலை 9.55 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன.

பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், அரச நிறுவனங்கள், பொது அமைப்புக்கள, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனைத்து நிறுவனங்களிலும் ஈகச்சுடர் ஏற்றி திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தப்படும். தொடர்ந்து நினைவுரைக

(10ம் பக்கம் பார்க்க)



தேசிய விளையாட்டு விழாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், சிங்களப் பயிற்றுவிப்பாளர்களுக்கு தமது நிலைப்பாட்டை விளக்கும் காட்சி.

## தேசிய விளையாட்டு விழாவிற்கு எதிர்ப்பு

# சிங்களப் பயிற்றுவிப்பாளர்களை வெளியேறுமாறு ஆர்ப்பாட்டம்!

(யாழ்ப்பாணம்)

29வது தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

விளையாட்டுத் துறை அமைச்சினால் இம் மாத இறுதிப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள மேற்படி விளையாட்டு விழா தொடர்பான பயிற்சிகளை வழங்கும் வகையில் தென் இலங்கையில் இருந்து வந்த 7 பேர் கொண்ட குழு கடந்த வாரம் தமது நடவடிக்கைகளை இங்கு ஆரம்பித்திருந்தது.


யாழ்.பீச் இன் விடுதியில் மேற்படி குழுவினர் தங்கியிருந்த வேளை நேற்று நண்பகல் 12 மணியளவில் அவ்விடத்திற்குச் சென்ற நூற்றுக் கணக்கான விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் பயிற்றுவிப்புப் பணிகளை உடனடியாக நிறுத்தி கொழும்பு திரும்பி விட வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடு

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்







சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற கருத்தரங்கில் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், சி.இளம்பரிதி மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளதையும், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், இந்து மத குரு பீடாதிபதி ஐ.மகேஸ்வரக் குருக்கள் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:ஜெறாட்)

## தந்தையும் மகனும் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(கொழும்பு)

ஹற்றன் ஹாசல் நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற தந்தையும் மகனும் நீரில் மூழ்கி இறந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,நீர்த்தேக்கத்துக்கு அருகில் புல் வெட்டுவதற்காக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3பேர் சென்றபோது,14 வயதுடைய மகன் கால்வழுக்கி நீர்த்தேக்கத்துள் விழுந்தார். இவரைக் காப்பாற்ற நீர்த்தேக்கத்தினுள் குதித்த தந்தையும் நீரினுள் மூழ்கி இறந்துள்ளனா.

உயிரிழந்த மகனின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும்,தந்தையின் சடலம் தேடப்பட்டு வருவதாகவும் ஹற்றன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.(தி-61)

## சமாதான செயலக குழு நாடு திரும்பியது

(கிளிநொச்சி)

சுவிற்சலாந்தில் நடைபெற்ற ஒரு நாள் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் சமாதான செயலக குழுவினர் நேற்று முன்தினம் காலை கிளிநொச்சிக்குத் திரும்பினர்.

சமாதான செயலகச் செயலாளர் புலித்தேவன் சமாதான செயலக பிரதிப் பணிப்பாளர் செல்வி மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஆகியோர் உலங்கு வானூர்தி மூலம் காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தனர். (த-43)

## அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோமகன் அமரர் கு.வன்னியசிங்கம் மற்றும் திருமதி வன்னியசிங்கம் ஆகியோரின் நினைவு தின அஞ்சலி நிகழ்வும் இரங்கல் உரையும் எதிர்வரும் 17ஆம திகதி காலை 10 மணிக்கு தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ்.அலுவலகத்தில் நடைபெறும். (த-05)

## பட்டதாரிகள் மீது தாக்குதல் அரசியல்வாதி ஒருவர் விசாரணையில்

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை மாத்தறையில் உண்ணாவிரதம் மேற்கொண்ட வேலையற்றபட்டதாரிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக இப்பிரதேச முக்கிய அரசியல்வாதி ஒருவர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

மேற்படி அரசியல்வாதியிடம் சுமார் 3மணிநேரம் வாக்குமூலம் பெறப்பட்டதாக இவ் விசாரணைகளுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் டி.ஏ.ஐ.ஆய்பால தெரிவித்துள்ளார்.

கடந்த யூன் 18ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வரும் பட்டதாரிகள் மீது, மீன்பிடிக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த விஜய சேகரவின் ஆதரவாளர்களே தாக்கினர் என குற்றம் சாட்டப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன.

இவ் விசாரணைகளின் விபரங்கள் அடங்கிய அறிக்கை, மற்றும சம்பவம் இடம் பெற்ற வேளை பொலிஸார் நடந்து கொண்ட முறைகள், குறிப்பிடப் பட்ட இடத்துக்கு வழங்கப்பட்டிருகின்ற பாதுகாப்பு நடவடிக்கைகளின் குறைப்பாடுகள் என்பவை தொடர்பான அறிக்கையும் பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (தி-61)

## நெல்லியடியில் தேசிய எழுச்சி பேரவை அலுவலகம் திறப்பு

(திருநெல்வேலி)

நெல்லியடி வதிரியில் தேசிய எழுச்சிப் பேரவையின் அலுவலகம் நேற்றுக்காலை 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கவியன்பன் மாஸ்டர் அலுவலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

தேசியக் கொடியினை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றி வைத்தார். பொதுச் சுடரினை மாவீரர் ரோமின் தந்தை ஏற்றி வைத்தார்.

ஆசியுரையினை நெல்லியடி மகாவித்தியாலய அதிபர் ச.சேது ராஜா வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு ஆரம்பமானது.

ஆசிரியர் அ.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில், நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் சத்தியசீலன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அங்கு உரையாற்றுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இன்றி இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.இதனை சர்வதேச நாடுகள் நன்றாக உணர்ந்துள்ளன.

யுத்தம் மூலம் விடுதலைப் புலிகளை அழித்து விடலாமென கனவு கண்ட இலங்கை அரசாங்கங்களும் சர்வதேசமும் அவர்களுடன் பேசியே தீர்வு காண முடியும் என்ற நிலைப்பாட்டிற்கு வந்துள்ளன.

அத்துடன் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளல்லர்.சுயநிர்ணயம், தன்னாட்சி ,தேசியம் என்பவற்றுக்காக போராடும் ஒரு விடுதலை அமைப்பு என்பதனையும் அவை உணர்ந்து ஏற்றுக்கொண்டுள்ளன. இதன் அடிப்படையிலேயே தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு புலிகளுடன் பேசி இணக்கப்பாட்டுக்கு வருமாறு சர்வதேச நாடுகள் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.(த-43)


உங்கள் வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்




கொள்ளைக்காரனின் கத்திக்குத்துக்குப் பலியான திருநெல்வேலி இளைஞன்.
மீண்டும் யசூஷி அகாஷி தூது.
தந்திரமாகக் காய் நகர்த்தும் பிரதமர் ரணில்.
வியாசரின் பதில்கள்.
செங்கை ஆழியானின்
ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
பொன்.கணேசமூர்த்தியின்
கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில்
உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00


வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00
சங்கு நாதம்
15-21 செப். 2003 Sankunatham

## வண்ணை - சாந்தையர்மடம்

# ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில்

## 15-ம் நாள் தீர்த்த அலங்கார உற்சவ

# சிறப்புமலர் - 2003



## ஆலய வரலாறு

வண்ணார்பண்ணை கிழக்கு வண்ணை சிவன்கோவிலுக்கும் நாவலா சைவப்பிரகாச வித்தியாசாலைக்கும மத்தியில் காங்கேசன்துறை வீதியில் உள்ள இக்கோயில் அமரர் அரியபுத்திர செட்டியார் அருணாசலச்செட்டியாரால் 1815 ஆம் ஆண்டு கல்லால் கட்டப்பட்டு ஓட்டினால் வேயப்பட்டுள்ளது என 1898 ஆம் ஆண்டு யாழ்.அரசாங்க அதிபரினால் பதிவுசெய்யப்பட்ட சைவசமய கோயில்கள் வரிசையில் இவ்வாலயத்தின் பெயர் உள்ளது. தனிப்பட்டவர்களின் முகாமையில் நடைபெற்ற ஆலயம் பின் குமாரசாமிச் செட்டியார்-சபாபதிச்செட்டியாரால் தர்மபரிபாலனசபை நியமிக்கப்பட்டு நிர்வாகம் நடைபெற்றது. சிலகாலம செயலிழந்திருந்த சபையை 1935 ஆம் ஆண்டு புனரமைப்பு செய்து, அன்று முதல் தர்மபரிபாலன சபை தமது பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றது. அண்மையிலுள்ள நாவலர் வித்தியாசாலையில் நடைபெற்ற ஆரம்ப கருமங்களின் போது இவ்வாலயத்தில் விசேட பூஜை வழிபாடு செய்து வந்தனர் என்பது செய்திவாயிலாக அறியமுடிந்தது. இன்றும் அத்தகைய முறை கையாளப்படுகின்றது. இன்றும் வெள்ளிக்கிழமை தோறும் வித்தியாசாலை மாணவர்கள் காலையில் சிவபுராணம் ஓதிவருகின்றார்கள். சதுர்த்தி, விநாயகர் விரதம், சங்கடகர சதுர்த்தி என்பன விசேடமாக அனுட்டிக்கப்படும். அத்துடன் ஆவணிமாத விநாயகர் சதுர்த்தியை அடுத்து 15 நாட்கள் அலங்கார உற்சவம் பக்திபூர்வமாக நடைபெறும்.

கந்தபுராணப்படனம், திருமுறை முற்றோதல், சமயவிரிவுரைகள் சிறப்பாக நடைபெறும். கந்தபுராணப்படனம் தொடர்ந்து 30 வருடங்களாக நடைபெறுகிறது.

இவ்வாலயத்தின் கிரியை முறைகளுக்கு வழிகாட்டியாக விளங்கியவர் அமரர் வியாகரண சிரோமணி கி.சீதாராம சாஸ்திரிகள். இவ்வாலயத்தில் மூன்றுகாலப் பூஜை தினமும் நடைபெறும்.

அருட்பொலிவுடைய விக்கிரகங்கள் இவ்வாலயத்தில் சிறப்பாக அமைந்துள்ளன. மேலும் கலையம்சம நிறைந்த வாகனங்கள் பல உண்டு.

ஆலயத்தின் வளர்ச்சி கருதி இளைஞர்களை உள்ளடக்கிய "சைவ சமய அபிவிருத்திக்கழகம" 50 வருடங்களாக சைவப்பணிகள் பல செய்து வருகின்றது. சமயக் கல்வியின வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு மாணவர்களிடையே சமய அறிவுப்போட்டி, செயல்முறைப்போட்டி, நீதிநூல் மனனப் போட்டி என்பனவற்றை நடத்தி வருடம் தோறும் மகாசிவராத்திரியன்று பரிசில்களை வழங்கி மாணவர்களுக்கு ஊக்குவிப்பு செய்கின்றனர். இவ்வாலயத்தின் அர்ச்சகராக பிரம்மஸ்ரீ தா.சதானந்த சர்மா கடமையாற்றுகின்றார். இவரது முன்னோர்களைத் தொடர்ந்து மூன்றாவது தலைமுறையாக இவர் கடமையாற்றுகின்றார்.

இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு சென்ற அயலில் வாழ்ந்த அடியார்கள் இன்றும் தமது அன்பளிப்புக்கள், உபயம் என்பனவற்றை தவறாது செய்து வருவது பாராட்டக்கூடிய தொன்றாகும்.

இன்று 15 அங்கத்தவர்களைக் கொண்ட தர்ம பரிபாலன சபை இவ்வாலயத்தை நிர்வகித்து வருகின்றது. ஆலயத்தை ஆரம்பித்தவர்களின் பரம்பரையில் ஒருவர் இச்சபையில் அங்கம் வகிப்பது பழமை. இப்பொழுது உள்ள இவ்வாலயத்தில் தொண்டு மனப்பான்மையிலேயே அடியார்கள் பலர் பங்களிப்புச் செய்கின்றனர். காலை 7.00மணி, நண்பகல் 12.00 மணி, மாலை 5.00 மணி என மூன்று காலப்பு,ஜை நடைபெறும். மாதம் தோறும் பூரணை வழிபாடு சிறப்பாக நடைபெறும்.

சைவப்புலவர் வ.கந்தசாமி
கௌரவ செயலாளர்,

## ஆசிச் செய்தி

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்துவரும்" என்பது உதயவாக்கு. சங்கத்தமிழ் மூன்றையும் அள்ளித்தரும் துங்கக் கரிமுகத்து தூயமணியாகிய விநாயகனைத் தொழுது நிற்கும் அடியார்கள் என்றும் சமாதானத்துடன் வாழ எல்லாம் வல்ல விநாயகப்பெருமான் அருள்புரிய வேண்டும். இங்கு சிறியோர்கள், முதியோர் என்றில்லாது பக்திவயப்பட்டு விநாயகனின் தொண்டர்களாக விளங்குகின்றனர். வேண்டுவோர் வேண்டுவதை ஈந்தருளும் விநாயகன் இன்று தீர்த்த உற்சவம் காணுகின்றான்.

யாழ்ப்பாண பிரதேசத்தில் காணப்படும் ஆலயங்களுள் பேருளுடைய ஆலயமாக சாந்தையர் மடம் கற்பகவிநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. அதன் அழகும் பொலிவும் பக்தர்களை ஈர்ப்பதாக உள்ளது.

இன்று தீர்த்தோற்சவம் காணும் விநாயகர் நாட்டில் சுபீட்சமும் சமாதானம் சாந்தி சர்வமங்களமும் கிடைக்க அருள்புரிய வேண்டுகின்றேன்.

சி.ஜோதீந்திரக் குருக்கள்
உற்சவகாலக்குரு.


**ஸ்ரீ ராம் கஜன் மிக்சர்**

கச்சான் பருப்பு, கடலை, பகோடா,
சீனிச்சேவ், காரச்சேவ், நெய்பூந்தி மற்றும்
இனிப்பு வகைகளை நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே இடம்.
ஸ்ரீராம் கஜன் மிக்சர்
இல. 7, பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.

**வாலாம்பிகை சிற்பாலயம**

90, சிவன் கோவில் வடக்குவீதி,
யாழ்ப்பாணம்.
கோவிலுக்குரிய சகல விக்கிரகங்களும்
திருவாசிகள், கலசங்கள், கொடித்தம்பம்
ஆகியவற்றையும் செய்து
பெற்றுக்கொள்ளலாம்.

மனம் விரும்பி சுவைத்திட
**சந்திரா கிறீம் ஹவுஸ**
108, சிவன் வடக்குவீதி,
யாழ்ப்பாணம்.

**P.S.B. தொலைத்தொடர்பு சேவை**

உள்நாட்டு, வெளிநாட்டு அழைப்புக்களை மிகக்
குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
(இன்ரநெற் வசதி உண்டு)
T.P. 021-222 2385 Local -222 2927
P.S.B. தொலைத்தொடர்பு சேவை
337, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**பாபா மிக்ஷர்**

தரமான மிக்ஷர், பூந்தி, முறுக்கு, காரச்சேவ்
வகைகளை நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
பாபா மிக்ஷர்
228, கண்டி வீதி, சாவகச்சேரி.
கிளை: 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**ஜெகன் களஞ்சியம்**

பலசரக்கு மற்றும் மிக்ஷர் தயாரிப்புப் பொருட்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
ஜெகன் களஞ்சியம்
285, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**தயா அச்சகம்**

(கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறின்டேர்ஸ்)
சகல விதமான அச்சுவேலைகளும் வேண்டிய
வர்ணத்தில் சிறந்த முறையில் குறித்த தவணையில்
குறைந்த செலவில் உங்கள் விருப்பத்திற்கேற்ற
வகையில் செய்து கொடுக்கப்படும்.
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 222 2881

# முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்கேற்க ஜப்பான் அரசு உதவவேண்டும்

## அகாஷியிடம் முஸ்லிம் பிரதிநிதிகள் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் இடையே இனிமேல் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாக கலந்துகொள்ள ஜப்பான் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என வடக்கு-கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷியிடம் கோரியுள்ளது.

ஜப்பானின் விசேட பிரதிநிதிக்கும் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டதாக ஒன்றியத்தின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சுமார் மூன்று மணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்பில், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாக கலந்துகொள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசு மறுக்குமாயின், எந்தவொரு முஸ்லிம் பிரதிநிதிகளோ அன்றி முஸ்லிம் அமைப்புகள் சார்பிலோ பேச்சுவார்தைகளில் கலந்து கொள்ளப் போவதில்லை எனவும்,

வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடைக்கால நிர்வாகசபை மற்றும் தமிழ்ப் பிரதேசங்களில் முஸ்லிம் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன பற்றியும் விளக்கப்பட்டன.

இவை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி உறுதியான தீர்வு எடுக்கப்படுமென அகாஷி உறுதியளித்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

## மனித உரிமைகளை மீறும் பொலிஸாருக்கு எதிராக கடும் நடவடிக்கை

(கொழும்பு)

மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸாருக்கெதிராக கடும் நடவடிக்கை எடுப்பதென பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜா தீர்மானித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களும் பொலிஸ்மா அதிபரும் அண்மையில் நடத்திய பேச்சுவார்தைகளை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் லியன்சி பெரேரா தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவர் உயிரிழக்க நேரிட்டால் அதற்கான பொறுப்பை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியே ஏற்கவேண்டும் என்பதை பொலிஸ்மா அதிபர் ஏற்கனவே அனைத்து பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் உத்தரவிட்டிருந்தார்.

இதேவேளை, தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மீது பொலிஸார் மேற்கொள்ளும் தாக்குதலகளால் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டதாக, நீதிமன்றம் தீர்ப்பளித்தால்,சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை சேவையிலிருந்து இடைநிறுத்துவதுடன், அவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக் கப்பட்டிருப்பதாக ஊடகப் பேச்சாளா மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

## தியாகி திலீபனின் நினைவகலா நாட்கள்




### ஈழத்தை எண்ணி தியாகியானான்

தேசநலன் மீட்க எழுந்தவனே!
தேமதுரத் தமிழைச் சொரிந்தவனே
பாசமிகு தலைவனை ஏற்ற வனே
பசியிருந்து உரிமைக்காய் நோற்றவனே!

ஈழமே உயிர் மூச்சாய் இருந்தவனே
இந்நாட்டின் விலங்கொடிக்க எழுந்தவனே
காலத்தை வென்று சாதனை புரிந்தவனே
கந்தனின் வீதியில் வேள்வி முடித்தவனே

மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன்

# பனை வளத்தை பெருக்குவது குறித்த தலைவரின் சிந்தனை செயல் வடிவம்பெற்று வருகிறது

## பனங்கைப்பொருள் கண்காட்சியில் தங்கன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எமது தேசத்தின் சொத்தென நாம் கருதுகின்ற பனை வளத்தினை மேம்படுத்துகின்ற வகையிலும பனம் உற்பத்திகளை பெருக்குகின்ற வகையிலும் எமது தேசியத் தலைவருடைய சிந்தனைகள் ஆழமாக இருக்கின்றன.

அதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்காக பல முயற்சிகளை நாம் எமது கட்டுப்பாட்டுப் பரதேசங்களிலும் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களிலும் மேற்கொண்டு வருகின்றோம் என தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் எஸ்.தங்கன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற பனங் கைப்பணிப் பொருட்கள் கண்காட்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தங்கன் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பனைவளத்தைப் பெருக்க வேணடும் என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைக்கு அமைவாகவே தமிழீழ மேம்பாட்டு பொருணமிய நிறுவனம் கிளிநொச்சி மாவட்டத்தில் பனை உற்பத்தி கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்யக்கூடிய வகையில் ஓர் நிறுவனத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

கடந்தகால போர் அனர்த்தங்களினால் பனைவளங்கள் எமது பிரதேசங்களில் பலதரப்பட்ட வகையில் அழிக்கப்பட்டுள்ளன. இதனை ஈடு செய்வதற்கு அனைவரும் மேன்மேலும் பனை மரங்களை நாட்ட முன்வரவேண்டும்.

பனை வளத்தை அழிந்து போகாது பாதுகாக்க வேண்டும். அதன் உற்பத்திகளை பெருக்கி சிறந்த பயனைப் பெற்றுக்கொள்ள நாம் முயல வேண்டும் என்றார். (உ-64,10)

## சுற்றுமதில் விழுந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேம்படி வீதி மாடடீன் வீதிச் சந்தியிலுள்ள திருக்குடும்ப கன்னியர் மடத்து சுற்றுமதில் கடந்தவாரம் சரிந்து வீழ்ந்துள்ளது.

இச்சம்பவம் இரவு நேரம் இடம் பெற்றதால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

(பி)



யாழ்.பிரதேச மக்கள்வங்கி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்துவைத்த பதில் துணைவேந்தர் பேராசிரியர் க.சிறறம்பலம் மற்றும் எம்.நடராஜ சுந்தரம, திருமதி எஸ்.திவாஸ்கரன், கே.தேவராஜா ஆகியோரைப் படத்தில் காணலாம்.

### நாடுகளுக்கிடையிலான நல்லுறவு குறித்து

## பாக். வெளிவிவகார அமைச்சரை பிரதமர் ரணில் நேற்றுச் சந்திப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான் வெளிவிவகார அமைசசர் குர்ஷிக்கசூரிக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நேற்றுக்காலை அலரி மாளிகையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவுகள் உட்பட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அடுத்தவருடம் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள 12வது சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு, அழைப்பு விடுவதற்காகவே கசூரி இலங்கைக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவையும் சந்திக்கவுள்ளார்.

இலங்கையில் 3 நாள் தங்கியிருக்கும் இவர், மேலும் பல அரசியல் தலைவர்களையும், வர்த்தகப் பிரதி நிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளமை குறிப்பிடத்தககது.

(தி-61)

### ஆனைக்கோட்டையில்

## சாரதிப் பயிற்சிக் கல்லூரி அமைப்பதற்கு முயற்சி

(மருதங்கேணி)

கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு வசதியாக இம்மாத இறுதிக்குள் யாழ்.ஆனைக்கோட்டையில் சாரதிப் பயிற்சிக்கல்லூரி ஒன்றை நிறுவவுள்ளதாக யாழ் மாவட்ட மோட்டார் திணைகள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்குடாநாட்டில் கனரக வாகனங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவது தாமதமடைவதைத் தொடர்ந்து அதனைத் துரிதப்படுத்த முதல்தர சாரதிப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கு இலங்கை மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைகளம் அனுமதி வழங்கியுள்ளது.

இங்கு பயிற்சிபெறும் சாரதிப் பயிற்சியாளர்களை உடற்பரிசோதனைக்குட்படுத்தி சான்றிதழ் வழங்க வைத்தியர் ஒருவரை நியமிக்கப்படவுள்ள சிக்கலினால் இக்கல்லூரியை நிறுவுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-35)

## பாடசாலை விடுமுறை நாட்களில் தேர்தல்களை நடத்தத் திட்டம்

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் தடைகள் ஏற்படா வண்ணம் பாடசாலைகளை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் வருடத்தில் 220 நாட்களாயினும் நடைபெறவேண்டும். ஆனால் கடந்த 5 வருடங்களில வருடம் ஒன்றிற்கு 195 நாட்களிலும் குறைவான நாட்களே பாடசாலைகள் நடைபெற்றுள்ளது.

தேர்தல்காலங்களில் பாடசாலைகள் மூடப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

எதிர்காலத்தில் வார இறுதி நாடகளில் அல்லது தவணை விடுமுறை நாட்களில் தேர்தல்களை நடத்துவது பற்றிய சாத்தியக்கூறுகள்குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-5)



வட இலங்கை ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்ல ஆச்சிரமத்திற்கு இந்து கலாசார அமைச்சினரால் வழங்கப்பட்ட பஸ்வண்டி கையளிப்பு விழாவை நல்லை குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், அமைச்சர் தி.மகேஸ்வரன், ஆச்சிரமச் செயலாளர் எஸ்.சுந்தரலிங்கம் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில்காணலாம்.

படங்கள்: பரு. நிருபர்

# அரபாத் பிரச்சினை மீது ஐ.நா. பாதுகாப்புச் சபையில் விவாதம்

## இஸ்ரேல் செயற்பாட்டுக்குக் கடும் எதிர்ப்பு

(நியூயோர்க்.)

பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தை நாட்டை விட்டு இஸ்ரேல் வெளியேற்றக் கூடாது என ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அவசரத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டு விவாதம் நடைபெற்றது.

அரபாத்தை நாடு கடத்துவதாக இஸ்ரேல் முடிவு செய்ததற்கு ஐ.நா. பாதுகாப்பு சபையின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

யஸீர் அரபாத்தை நாட்டை விட்டு வெளியேற்றக் கூடாது. அவருக்கு எதிரான அச்சுறுத்தல் களையும் மிரட்டல்களையும் உடனடியாக நிறுத்தவேண்டும் என்று அவசரத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பின்னர் இந்த தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் விவாதம் நடத்தினர். எந்தவித முடிவும் எடுக்காமல் கூட்டம் ஒத்திவைக் கப்பட்டது.

இன்று திங்கட்கிழமை விரிவான விவாதம் நடத்த முடிவு செய் யப்பட்டது.

பின்னர் கொண்டு வரப்பட்ட தீர்மானம் குறித்த அறிக்கையை தலைவர் எமர் ஜோன் பாரி வெளியிட்டார்.

பலஸ்தீனத்திலிருந்து அர பாத்தை வெளியேற்றுவதால் எந்தத் தீர்வும் காணமுடியாது; அவரை நாடு கடத்துவதான அறி விப்பை இஸ்ரேல் திரும்பப் பெறவேண்டும்.

இருப்பினும் கூட் டத்தில் தீர்மானம் முறையாக இன்னும் அறிமுகப்படுத்தவில்லை என்று அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

அரபு நாடுகளின் வற்புறுத்த லினால் வரைவு தீர்மானத்தின் அறிக்கையை வெளியிடுவது என தற்செயலாக முடிவு எடுக் கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் சபையில் தீர் மானம் குறித்து ஆலோசிக்க சிறிது காலம் ஆகலாம் என உறுப்பினர்கள் தெரிவித்துள் ளனர். ஆனால் இத்தீர்மானத்தை விரைந்து நிறைவேற்ற முயன் றால், இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா, தனது ரத்து அதிகாரத்தால் தீர் மானத்தை நிறைவேற்றவிடாமல் செய்ய முயற்சிக்கும்.

பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டத்தை உடனடி யாக கூட்டவேண்டும் என அரபு நாடுகள் மற்றும் அணி சேரா நாடுகள் வேண்டுகோள் விடுத்திருந்தன.

மேலும் வரைவு தீர்மானத்தை விரைவில் வாக்கெடுப்புக்கு விடவேண்டும் எனவும் அவை கோரியிருந்தன.

இதற்கிடையே தீர்மானம் மீது விரைவில் வாக்கெடுப்பு நடத்தக் கோருவோம் என ஐ.நா.வுக்கான பலஸ்தீன தூதர் நாசர் அல்-கித்வா தெரிவித் தார்.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் தற்போதைய அசாதா ரண சூழ்நிலையில், நாடு கடத்துவதை நிறுத்தக் கோரி யும், பலஸ்தீன தலைவரின் பாதுகாப்புக்கு விடப்படும் அச் சுறுத்தல்களை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. வன்முறையைத் தூண்டுவது, தீவிரவாதம், பேரழிவை உண்டாக்குதல் ஆகி யவற்றை உடனடியாக நிறுத்த வும் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

அதேசமயம் 2005-க்குள் பலஸ்தீன நாடு அமைய அமெ ரிக்கா கூறியுள்ள திட்டத்தை இரு நாடுகளும் அமுல்படுத்த தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானத் தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (பி)

## அயோத்தியில் ராமர் கோயில் இயக்கத்தை தீவிரப்படுத்த முடிவு

(புதுடில்லி)

ராமர் கோயில் இயக்கத்தை தீவிரப் படுத்த பா.ஜ.க.வும்,ஆர்.எஸ்.எஸ். இயக்கமும் முடிவு செய்துள்ளன.

பாபர் மசூதி இருந்த இடத்தில் முற்காலத்தில் கோயில் இருந்த தற்கு ஆதாரம் உள்ளதாக இந்திய தொல்லியல் துறை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. எனவே ராமர் கோயில் இயக்கத்தை தீவிரப்படுத்த முடிவு செய்திருப்பதாக பா.ஜ.க. பொதுச் செயலாளர் பிரமோத் மகா ஜன் நிருபர்களிடம் கூறினார்.

பா.ஜ.க.மேலிடத் தலைவர்களும் ஆர்.எஸ்.எஸ்.தலைவர்களும் டில்லி யில் கடந்த சனிக்கிழமை நடத்திய கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப் பட்டது. துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி பா.ஜ.க தலைவர் எம் வெங்கைய நாயுடு,ஆர்.எஸ் எஸ். தலைவர்கள் மோகன் பகவத் மதன்தாஸ் தேவி ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண டனர்.

இக்கூட்டத்துக்கு பிறகு பிரமோத் மகாஜன் நிருபர்களிடம் கூறியதாவது:-

அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வகை செய்யும்சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று விசுவ இந்து பிரிஷத் போராட்டம் நடத்தவுள்ளது. இதில் பா.ஜ.க.வுக்கு ஆட்சேபம் இல லை. ஆனால் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள கட்சிகள் இச் சட் டத்தை எதிர்க்கின்றன. அக்கட்சிக ளின் மனநிலை மாறும் வரை இச்சட் டத்தைக் கொண்டுவர இயலாது.

குஜராத்தில் பா.ஜ.க.தலைமையி லான அரசு பற்றி உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்து பற்றியும் இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.குஜ ராத் முதல்வர் நரேந்திரமோடி ராஜி நாமா செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறவில்லை. உச்ச நீதி மன்றத்தின் கருத்து பொதுவான கருத் தாகும். மோடி ராஜிநாமா செய்யும் பேச்சுக்கே இடமில்லை. குற்றவாளி களைத் தண்டிக்க அவர் இன்னும் தீவிர நடவடிக்கைகளை எடுப்பார்

5மாநிலங்களில் நடக்கவிருக்கும் தேர்தல் அடுத்த ஆண்டு நடக்கவிருக் கும் மக்களவைத் தேர்தல் ஆகியவை பற்றியும் இக்கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது என்றார் மகாஜன். (பி)

## தென்கொரிய சூறாவளிக்கு 74 பேர் பலி

(சியோல்)

தென்கொரியாவில் நேற்று முன் தினம் வீசிய சக்திவாய்ந்த சூறா வளிக் காற்றுக் காரணமாக உயிரி ழந்தோர் தொகை 74 ஆக அதி கரித்துள்ளது.

மேலும் 24 பேரைக் காணவில்லை யென்றும், 25 ஆயிரத்திற்கும் அதி கமானோர் வீடுகளை விட்டு வெளி யேறியுள்ளனர் என்றும் தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(பி-2)



வடமேற்கு சீனாவில் ஜிங்ஜியாங் மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க கடந்த 11ம் தேதி உடலை வில்லாக வளைத்து சாகசம் செய்த சிறுமி

உலக தரிசனம்

## ரொக்கா பேச்சுக்கு பாக்.கண்டனம்

(இஸ்லாமபாத்)

எல்லை தாண்டி ஊடுருவுவதை நிறுத்துமாறு பாகிஸ்தானை அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தும் என்று டில்லியில் அமெரிக்க வெளியுறவுத் துறை துணை அமைச்சர் கிறிஸ்டின ரொக்கா பேசியதற்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் சனிக் கிழமை இதைத்தெரிவித்துள்ளார். (பி)

## சட்டவிரோத குடியேற்ற வாசிகளின் படகு கவிழ்ந்ததில் 18பேர் பலியாகினர்

### யேமன் கடல் பிரதேசத்தில் சம்பவம்

(சனா)

யேமன் கடல் பிரதேசத்தில் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளா னதில் 18பேர் உயிரிழந்திருப்பதுடன் 27பேர் காணாமல் போயுள்ளனர்.

யேமன் நாட்டிற்குள் சட்டவிரோத மாக ஊடுருவ முயற்சித்த போதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

சுமார் 100பேருடன் பயணம் செய்த இப்படகிலிந்த 55பேரை பாதுகா ப்பாக காப்பாற்றியிருப்பதாக யேமன் அரசுதகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படகில் பயணித்தவர்கள் சோமாலியா மற்றும் எதியோப்பியா வாசிகளே இவ்வாறு சட்டவிரோத மாக குடியேற முயன்றுள்ளார்கள்.

யேமன் தேசத்தில் 70ஆயிரம் பிற நாட்டு அகதிகள் இருக்கின்றனர் என்றும் இவர்களில் அதிகமானவர் கள் சோமாலியர்கள் என்றும், ஐக் கிய நாடுகளின் அகதிகள் விவகா ரப் பிரிவு அறிவித்துள்ளது. இதே வேளை,1இலட்சத்து 65ஆயிரம் அக திகள் யேமனில் குடியேறியுள்ளார் கள் என்றும் மேலும் தெரிவிக்கப் படுகின்றது. (பி-2)

## காவிரி நதி நீர் ஆணையத்தை விரைவில் கூட்டுவதற்கு பிரதமர் உறுதி

(சென்னை)

தமிழகத்தில் காவிரிப் பாசனப் பகுதி விவசாயிகளின் துயரைப்போக்கு வதற்காக காவிரி நதி நீர் ஆணையத் தின் கூட்டத்தை விரைவில் கூட்ட நடவடிக்கை எடுப்பதாக, தி.மு.க தலைவர் கருணாநிதியிடம் பிரதமர் வாஜ்பாய் உறுதி அளித்துள்ளார்.

சென்னை அப்பல்லோ மருந்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் மத்திய அமைச்சர் முரசொலி மாறனை அவர் சனிக்கிழமை பார்த்தார்.

அவருடைய குடும்பத்தினருடன் சிறிது நேரம் பேசிய பிரதமர் அதன் பிறகு தி.மு.க தலைவர் மு.கருணாநி தியுடன் பேசினார்.

வாஜ்பாய் சென்ற பிறகு நிருபர் களிடம் கருணாநிதி கூறியதாவது ,

மாறனைப் பிரதமர் பார்த்தார். பிர தமரின் வருகையை மாறன் உணர் ந்தார்.

பின்னர் காவிரிப் பாசனப் பகுதியில் விவசாயிகள் படும் துயரங் களை எடுத்துக் கூறினேன்.டில்லி சென்றதும் சம்பந்தப்பட்ட மாநி லங்களின் முதல்வர்களுடன் பேசி காவிரி நதிநீர் ஆணையக் கூட் டத்துக்கு ஏற்பாடு செய்வதாக பிரதமர் உறுதி அளித்தார்.

பொடா பற்றி இங்கு எதுவும் பேச வில்லை.அது பற்றி விழுப்புறத்தில் பேசுவேன் என்றார் கருணாநிதி.

மருத்துவமனைக்குப் பிற்பகல் 1.20 மணிக்குப் பிரதமர் வந்தார். லிப்ட் வரை அவர் காரில் வந்தார். லிப்ட் அருகே அவருக்குச் சால்வை அணிவித்து வரவேற்றார் கருணா நிதி. மத்திய அமைச்சர்கள் டி. ஆர்.பாலு,ஏ .ராஜா ,முன்னாள் மேயர் மு.க.ஸ்டாலின் ஆகியோரும் பிரத மருக்குச் சால்வைகள் அணிவித்த னர்.

மாறனைப் பார்த்த பிறகு 1.45 மணிக்குப் பிரதமர் புறப்பட்டுச் சென்றார்.

பிரதமருடன் மத்திய தொலைத் தொடர்புத் துறை இணைஅமைச் சர் சு.திருநாவுக்கரசர்,பா.ஜ.க அகில இந்திய செயலர் இல.கணேசன்,தமி ழக பா.ஜ.க தலைவர் சி.பி.ராதாகி ருஷ்ணன் ஆகியோரும் வந்திருந் தனர். (பி)



# மக்களுக்காகப் பாடிய மக்கள் கவிஞர் பாரதி

மகாகவி சுப்பிரமணிய பாரதிக்கு இன்று தமிழர் வாழும் இடமெல்லாம் விழாவெடுக்கிறார்கள். ஒழுங்கைகள், வீதிகள் ஏன் சனசமூக நிலையங்கள் கூட பாரதியின் பெயரிடப்படுகின்றன.

பாரதியைப் பற்றி ஆய்வு செய்கிறார்கள், நூல்கள் எழுதுகிறார்கள், நாடகம் போடுகிறார்கள் ஏன் படங்கள் கூட எடுக்கிறார்கள்.



அதன் இனிமை தெரியும் என்று இவர்கள் வாதிட்டதாகக் கூறுவார்கள்.

''செந்தமிழ் நாடு'' என்று ஒருவர் சொன்னாலே போதும். அது காதின் வழியாகத் தேன் பாய்வது போல் சுவைக்கிறது என்பது பாரதியின் கருத்து. ''தேன்'' என்றால் அதன் சுவையும், மணமும் அதிலிருக்கும் விறுவிறுப்புத் தன்மையும் எந்த மனிதருக்கும் இயற்கையாகவே நினைவுக்கு வரும். இம் மாதிரியான இன்பமே ''செந்தமிழ் நாடென்று'' யாராகிலும் சொல்லக் கேட்டால் ஒரு உண்மையான தமிழ உள்ளம் கொண்ட மனிதனுக்கு ஏற்பட முடியும் என்பதே பாரதியின் கருத்து.

தமிழ் நாட்டின் சிறப்பை வெளிப்படுத்தும் கருத்துகள் அமைந்த கவிதை எழுதும் போட்டி ஒன்றை அந்தக் காலத்தில் தமிழறிஞர்கள் குழுவொன்று நடத்தியது - தமிழ் நாட்டின் தலைசிறந்த அறிஞர்கள் எல்லாரும் கலந்துகொண்டார்கள். பாரதியும் பாடல் அனுப்பியிருந்தார். ஆனால், பாரதிக்குப் பரிசு கிடைக்கவில்லை - இருந்தும் பரிசு பெற்றவர் யார் என்பதோ, பரிசு பெற்ற கவிதை எது என்பதோ இன்று எவருக்கும் தெரியாது. ஒருவேளை இதுபற்றி ஆராயும் அறிஞர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

பா!சுக்குதவாத பாரதியின் பாடல் இன்று தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் பாடப்படுகின்றது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை செநதமிழ் நாடெனும் போதினிலே என்ற பாடலை அறியாதவர்கள் இருக்கமுடியாது.

இந்தப் பாடலின் விசேஷம் என்னவென்றால், தமிழ் மக்களில் படிக்காதவர்கள் மத்தியிலும் கூட அது பரவும் வகையில் பாரதி அதற்காக எடுத்துக்கொண்டுள்ள மெட்டாகும். கிராமங்களில் பாமர மக்கள் மத்தியில் பரவலாகப் பாடப்படும் கும்மி மெட்டை இப்பாடலுக்குப் பாரதி பயன்படுத்தியிருக்கிறார்.

இது பாரதியின் இன்னுமொரு மேதைத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது, ''படித்தவர்கள் வேண்டுமானால் என் பாடல்களை ஒதுக்கிவிட்டுப் போகட்டும், நான் யாருக்காகப் பாடுகின்றேனோ அவர்கள் - நாட்டின் பரந்துபட்ட மக்கள் சமுதாயம் - அவர்களுக்குப் போய்ச் சேர்ந்தால் போதும்'' என்பதே.

ஆனால், அவன் உயிருடன் இருந்த காலத்தில் அவனுக்கு உதவி புரிந்தவர்கள் மிக மிகச் சிலபேரே என்று அறியும்போது, இந்தத் தமிழினத்தின் காலம் கடந்த விழிப்புணர்வு இருந்தவாறு என்னே! என்று ஏங்கத் தோன்றுகின்றது.

ஆனால், இன்று நம் பாரதியைப் பற்றி அறியாத தமிழரில்லை.

ஏதோ ஒருவித தேசிய உணர்வு பெற்ற வெறும் பைத்தியம் என்றுதான் அந்தக் காலத்தில் அவனைப பற்றி நினைத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள்.

அவனது தேசியக் கவிதைகளை, விடுதலைக் கீதங்களை அநேகர் கேட்கவே விரும்பவில்லை என்றால், பாடுவதற்கு எவர் விரும்பியிருப்பார்? அவ்வளவுக்கு ஆட்சியாளரின் கெடுபிடிக்கு மக்கள் பயந்திருக்கிறார்கள்.

ஆனால், பாரதி தன்னை நன்றாகவே உணர்ந்திருந்தார். தனது குறுகிய வயதைக்கூட அறிந்திருந்தது போலவே மிக வேகமாகவும், அவசர அவசரமாகவும் அனேகப் படைப்புக்களை ஆக்கியிருக்கிறார்.

பாரதியின் கவிதைகள் மிக வேகமுள்ளவையாகவும், மனித மனங்களைத் தூண்டிவிட்டு ஊக்கப்படுத்துபவையாகவும் இருந்தன.

ஆனால், படித்தவர்களும் அதிகம் படித்தவர்களாகக் காட்டிக் கொளள முனைந்தவர்களும் அவருடைய பாடல்களில் குறை கண்டு பிடிக்கவும் செய்தார்கள்.

30 கோடி சனங்களின் சங்கம்

## அன்றும் இன்றும்

என்று பாரதி பாடியிருக்கிறார். அந்த் 30 கோடி இப்பொழுது 100 கோடிக்கு மேல் போய்விட்டதே என்று சிலர் நினைக்கிறார்கள்.

பாரதியின் காலத்தில் இந்திய மக்களின் தொகை 30 கோடியாக இருந்துள்ளது. அது கால ஓட்டத்தில் அதிகரிக்கும் என்பது அவருக்குத் தெரியாத விடயமல்ல. ஆனால், இத்தனை கோடி மக்களுக்கும் பொது உடைமையாக பாரத தேசம் விளங்கப்போகின்றது என்பதே பாரதியின் கருத்து.

செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்ற பாடலைக்கூட சில தமிழ்ப் பண்டிதர்கள் அந்தக் காலத்தில் குறை கூறியதாகச் செய்திகள் உண்டு.

தேன் எப்படி காதில் வந்து பாயும், அது வாயில் பாய்ந்தால் தானே

மக்கள் இலக்கியங்கள் மேடைகளில் சிலாகித்துப் பேசப்பட்டால் மட்டும் போதாது. அவை பரந்துபட்ட மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். அவர்கள் மத்தியில் அவை நிலைபெற வேண்டும். அப்பொழுது அவை அவர்களின் ஊனிலும, உதிரத்திலும் ஊறிவிடும். அதனால், அது ஊழிக்காலம்வரை அழிக்க முடியாமல் மக்கள் மத்தியில் நின்று நிலைபெற்றுவிடும். ஆக செந்தமிழ் நாடெனும் போதினிலே என்ற பாடல் தமிழர் உள்ளவரை, தமிழ்மொழி உள்ளவரை நிலைத்து நிற்கும் - பாரதியும் நிற்பார் என்று சொல்ல வேண்டுமா?

மகாகவிகள் பலரையும் பொதுவாக எடுத்துப்பார்த்தால் புதிதாகப் படைப்பது ஒருபுறம் இருக்க, ஏற்கனவே உள்ள ஒன்றை அல்லது அதன் ஒரு அம்சத்தை எடுத்துக் கொண்டு தமது கருத்தை சொல்லுவதற்குப் பயன்படுத்தும் பாங்கு வெகுவாகவே காணப்படுகின்றது. அவ்வாறு செய்யும்போது அவர்களின் சிறப்பு மேலும் சிறப்படைகின்றது.

ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீஸர், கம்பனின் இராமாயணம், புகழேந்தியின் நளவெண்பா, இந்த வரிசையில் மகாகவி பாரதியின் பாஞ்சாலி சபதத்தையும் கூறலாம்.

மகாபாரதத்தின் ஒரு அம்சமே பாஞ்சாலியின் சபதம். பாரத மக்களை எழுச்சிகொள்ளச் செய்வதற்காக அதனை அவர் சிறப்பாகப் பயன்படுத்தினார்.

★ ★ ★

# இக்காலப் போர்முறை

சாதாரண மக்களைக் கொன்றொழிப்பதன் மூலம் அந்த மக்களின் நியாயமான நிலைப்பாடுகளை அழித்துவிடலாம் என்று சிந்திப்பதானது இன்று, நேற்று மட்டுமல்ல. பல காலமாகவே பேரினவாதிகளாலும், அதிகாரப் போதை கொண்ட அரசுகளாலும் பின்பற்றப்பட்டு வந்துள்ள ஒரு கொள்கைதான்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போதுதான் இருதரப்பு இராணுவங்களுக்கிடையில் கடைசியாகத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுவதுண்டு.

போர்க்களத்தில் வீரர்கள் இறந்தார்கள். பொதுமக்கள் தங்கள் வீடுகளில் தங்கியிருந்து தமது வழமையான கடமைகளில் ஈடுபட்டார்கள்.

போர் எடுப்புக்களின் போதும்கூட அரசர்களும், படைத்தளபதிகளும், பிரதானிகளுமே குறிவைக்கப்பட்டனர். சாதாரண மக்கள் பிரச்சினையின்றி வாழ்ந்தார்கள்.

அலெக்ஸாண்டர் போன்ற பெரும் படையெடுப்புக்களை நடத்தியவர்களின் படைவீரர்கள் பொதுமக்களில செல்வந்தர்களின் உடைமைகளையே சூறையாடியதாகக் கூறப்படுகின்றது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது தான் நாகரீகமான போர்முறை முறியடிக்கப்பட்டது. விமானங்கள் நகரங்களையும், கோட்டை, கொத்தளங்களையும், சாதாரண மக்கள் குடியிருப்புக்களையும் குறிவைத்துத் தாக்கி நாசம் விளைவித்தன. போரில் எந்த விதத்திலும் சம்பந்தப்படாத மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

எவ்வளவுக்குப் பொதுசனங்கள் கொல்லப்படுகிறார்களோ, அந்த அளவுக்கு அந்த நாட்டு மக்களின் உணர்ச்சிகளைக் கொன்றுவிடலாம் என்று இந்தமாதிரியான யுத்தங்களில் ஈடுபட்டவர்கள் கருதினார்கள்.

இருந்தாலும், இந்த மனிதக் கொலைகள் சம்பந்தப்பட்ட நாடுகளின் அடிப்படை உள்ளார்ந்த நோக்கங்களை அழித்துவிடவில்லை. அவ்வாறாயின் இந்தக் கொலைகளினால் என்ன பயன் கிடைத்தது?

இலங்கையில் தமிழ் மக்கள் நியாயமான தமது உரிமைகளை அமைதியான முறையில் முன்வைத்த போதெல்லாம் இலங்கையில் பதவியிலிருந்த அரசுகளும் அதன் தலைவர்களும் ஆயுதம் ஏந்தாத அப்பாவி மக்களை ஆயுதப் படைகளைக் கொண்டே நசுக்கி ஒழித்துவிட முனைந்தார்கள்.

பிரஜாவுரிமைக்கான சத்தியாக்கிரகமானால் என்ன, மொழி சமவுரிமைக்கான சாத்வீகப் போராட்டம் என்றால் என்ன; ஆயுதம் இருக்கின்றது. இனவெறி கொண்ட படைகள் இருக்கின்றன, அடி, உதை, கொலை எனக் கட்டவிழ்த்து விட்டால், தமிழரின் உணர்ச்சிகளைப் பொசுக்கி நாசமாக்கிவிடலாம், பின்னர் என்றும் போல் கொத்தடிமைகளாக அவர்களை வைத்திருக்கலாம் என்று மனப்பால் குடித்தவர்கள் இன்று செய்வதறியாது திகைக்கிறார்கள்.

★ ★ ★

தமிழர் மீது கட்டவிழ்க்கப்பட்ட அடக்குமுறைகள் எவற்றாலும் தமிழர் உணர்ச்சியை, அவர்களின் அடிப்படை நியாயபூர்வமான நிலைப்பாட்டினை அழித்துவிட முடியவில்லை.

இப்பொழுதாயினும், உணர்ந்தார்களா என்றால், சந்தேகமாகவே இருக்கின்றது - உணர்ந்திருந்தால் ஏன் இன்னமும் இழுத்தடித்துக் கொண் டிருக்கின்றார்கள்.

★ ★ ★

# மைக்கல் ஜெக்ஸனின் கவலைதரும் எதிர்காலம்

கைகள் அனைவரையும் அங்கலாய்க்க வைத்தன.

''இவருக்கு என்ன நேர்ந்துவிட்டது. கடவுளே ஜெக்ஸன் சாகப் போகிறாரோ!'' என்று அவரை நீதிமன்றத்தில் கண்டதும் தாம் நினைத்ததாக அவரது நீண்டநாள் நண்பர் ஒருவர் கூறினார்.

44 வயதான ஜெக்ஸனின் குடும்பத்தினரும் இவ்வாறுதான் கவலைப் படுகிறார்கள். அவர் இன்னமும் டினரிரால் என்ற போதைப்பொருளைப பாவித்து வருகின்றார். அதனை அவரால் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது. அது அவரை முடித்து விடும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

நீதிமன்றில் அவர் இரண்டாவது நாளாக சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்னர் அவசரமாக வைத்திய உதவியை நாடவேண்டியிருந்ததாக வெளியான செய்தி அவருடைய குடும்ப உறுப்பினர்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது.

நீதிமன்றத்தில் அவர் நடந்து கொண்ட முறையும், பார்வையாளர்களை எரிச்சல்பட வைத்தது. சாட்சிக் கூண்டில் நின்றபோது நித்திரையாகிப் போனதுடன், தட்டி எழுப்பப் பட்டபோது கேலியாகச் சிரித்துக் கொண்டும் ஒலிவாங்கியில் இசை எழுப்பிக்கொண்டும் நின்றமை பார்வையாளர்களை ஆத்திரங்கொள்ள வைத்தது.

அவர் இப்படி நடந்துகொள்வது இது முதல் தடவையல்ல. கடந்த நவம்பரில் அவர் டினரிரால் போதையை ஏற்றிக்கொண்டு இயந்திர மனிதன் போல் சுற்றித் திரிவதாகவும், பெருமளவில் வைன் அருந்திக்கொண்டிருப்பதாகவும் அவரது அலுவலர் ஒருவர் அறிவித்ததையடுத்து, அவரது சகோதரிகள் ஜெனட், றெபி, சகோதரர்கள் ரிட்டோ, றன்டி ஆகியோர் லொஸ் ஏஞ்சலஸிலிருந்து நியூயோர்க்கிற்கு அவசரமாகப் புறப்பட்டுப் போகவேண்டியிருந்தது. ஆனால், எதுவித சிகிச்சையையும் ஏற்றுக் கொள்ள ஜெக்ஸன் மறுத்துவிட்டார்.

போதைப்பொருளுக்கு நன்றாகவே அடிமையாகிவிட்டார் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

சில சமயங்களில் டினரிரால் எடுப்பதைக் குறைக்கிறார், மற்ற சமயங்களில் அளவுக்கு மீறி எடுக்கிறார் என்று அவரது பணியாளர்கள் கூறுகின்றார்கள்.







### மைக்கல் ஜெக்ஸனின் எதிர்காலம்?

மைக்கல் ஜெக்ஸன் என்றால் இன்றைய உலகில் அறியாதவர்கள், கேள்விப்படாதவர்கள் இருக்க முடியாது.

பொப்பிசை உலகில் அரசனாக ஏன் சக்கரவர்த்தியாக வலம் வந்து கொண்டிருக்கும் இந்த இளைஞனின் வாழ்க்கை இன்னும் சில காலத்துக்குள்ளாகவே அழிந்துவிடுமோ என்று அவரது ரசிகர்கள், அவரை அறிந்தவர்கள் ஏன் அவரது குடும்பத்தினரும் கூட அஞ்சுகிறார்கள்.

அண்மையில் ஒரு கலைநிகழ்ச்சியில் கலந்துகொள்ள ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி வராது விட்டமைக்காக ஏற்பாட்டாளர் 20 மில்லியன் டொலர் நஷ்டம் ஏற்படுத்தியதாக அவர் மீது தொடர்ந்திருந்த வழக்கில் அவர் கலிபோனியா நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்திருந்தபோது, நண்பர்களும், உறவினர்களும் அவரது உடல்நிலையைப் பார்த்து அதிர்ச்சியுற்றார்கள். பல தடவைகள் பிளாஸ்டிக் அறுவைக்குள்ளாகவிட்ட அவரது மூக்கு, நிறம் மாறிவிட்டதுடன் மோசமாக வீங்கியும், அமைப்பு மாறியுமுள்ள

## சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

வைத்தியரின் சொந்தப் பாவனையில் நல்ல நிலையில் உள்ள TOYOTA HIACE விற்பனைக்கு உண்டு (சகல் ஆவணங்களுடனும்) தொடர்பு: T.PHONE -0777-589608

(7463)


### வருடாந்த உற்சவம்

(நவாலி)

ஆனைக்கோட்டை சாவல்கட்டு முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளது. (தி-102)

### மருந்துகள் தட்டுப்பாடு

(நவாலி)

நவாலி அரசினர் வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக செல்லும் நோயாளர்களுக்கு உரிய மருந்து வகைகள் கொடுக்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (தி-102)

### ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷியின் அறிவிப்பு

# புலிகளின் பங்கின்றி சமாதானம் இல்லை என்பதை உலகம் முழுமையும் உணரவைத்துள்ளது

### தேசிய எழுச்சிப்பேரவை சங்கம நிகழ்வில் கயல்விழி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் பங்களிப்பு இல்லாமல், அரசியலிலோ அல்லது



சமாதான நடைமுறைகளிலோ எந்தவொரு மாற்றமும் உருவாகாது .உருவாக்கவும் முடியாது என்ற உண்மை நிலையை, ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி சர்வதேசத்திற்கே தெளிவுபடுத்தியுள்ளார்.

கடந்த வியாழனன்று கொழும்பில் அகாஷி தலைமையில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டு நிதியைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான மாநாட்டில், விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தால் மட்டுமே, டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம், இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு நிதி வழங்கப்படும் என்ற அவரின் கூற்று இதனை மெய்ப்படுத்தியுள்ளது என்று யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கயல்விழி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப்பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் முதலாவது சங்கமம் நேற்று முன்தினம் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் இடம் பெற்றபோது அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கயல்விழி மேலும் கூறுகையில்,

புலிகளை, இராணுவ பலத்தினால் அழித்து விடலாம் என்று நினைத்த இனவாத அரசுகளுக்குப் பல வழிகளிலும் பக்க பலமாக நின்று உதவிய சர்வதேச சமூகம், இனிமேல் புலிகளைப் போர்மூலம் வென்று விடமுடியாது என்பதை உணர்ந்து, பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதற்கு ஊக்கமளித்து வருகின்றது.


பயங்கரவாதிகள் என முத்திரை குத்திய உலக நாடுகள், எமது போராட்டத்தின் தன்மையைப் புரிந்து கொண்டுள்ளன. தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் தான் என்பதையும் அவை நன்குணர்ந்துள்ளன.


மக்களின் ஆதரவோடு வளர்ச்சி கண்டுள்ள எமது தாயக விடுதலைப் போராட்டம் இன்னமும் ஓய்ந்து விடவில்லை.

தற்போது போர் ஓய்ந்திருக்கின்றதே தவிர, நிரந்தர சமாதானம் ஏற்படவில்லை. எமது கைகளை விட்டு ஆயுதங்கள் இறங்கவில்லை.

நிரந்தர சமாதானம் உருவாகும் வரை, இனவாதிகள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (உ-4)







அகில உலக இரத்ததான தினமாக ஸ்ரீசத்திய சாயி பாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட நேற்றைய தினம், யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வுக் காட்சிகள். (படங்கள்:ஜெ.ஜெராட்)

# பாராளுமன்றத் தெரிவுக் குழு தேர்தல் ஆணையாளரைச் சந்திக்கும்

(கொழும்பு)

தேர்தல் முறையை மாற்றி அமைப்பது தொடர்பில் தேர்தல் ஆணையாளரின் கருத்துக்களை அறிவதற்கு, தேர்தல்முறையை மாற்றியமைப்பதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ நாயக்காவை பாராளுமன்றத் தெரிவுக் குழு சந்தித்து கருத்துக்களை கேட்டறியும் என அக்குழுவின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது, தற்போதைய தேர்தல் முறையில் உள்ள சிக்கல்கள், தொகுதி முறை தேர்தலில் உள்ள அனுகூலங்கள், பிரதிகூலங்கள் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளது.

இச்சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு புள்ளி விபரத்திணைக்களப் பணிபபாளர் நாயகத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய சனத்தொகை இன விகிதாசாரம், மாவட்டரீதியிலான சனத்தொகை உட்பட சகல புள்ளி விபரங்களையும் பணிப்பாளர் நாயகம் அன்றைய சந்திப்பின்போது சமர்ப்பிக்கவுள்ளார். (தி-61)

### பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்கள் அழிப்பு

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் சந்திப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில், ஊர்காவற்றுறை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் திடீரென மேற்கொண்ட பரிசோதனைகளின் போது, காலாவதியான பெருமளவு உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பரிசோதனைகளின் போது மனிதப் பாவனைக்கு ஏற்றதல்லாத பிஸ்கட் மற்றும் பால்மா வகைகளே கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாகத்தெரியவருகிறது. (உ-75)

# இரு நாடுகளுடன் விரைவில் வர்த்தக உடன்படிக்கை

(கொழும்பு)

எகிப்து, பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகளுடனும் இலங்கை இவ்வருட இறுதியில் வர்த்தக உடன்படிக்கைகளை மேற்க் கொள்ளவுள்ளது:

உலக வர்த்தக மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மெக்ஸிக்கோ சென்றுள்ள வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவிகருணா நாயக்க இவ்விரு நாடுகளின் வர்த்தக அமைச்சர்களுடன் நேற்று முன்தினம் இவ்விடயம் குறித்து அங்கு கலந்துரையாடினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, சமாதான சூழ்நிலை ஏற்படத்தொடங்கியதன் பின்னர், இலங்கையில் முதலீடுகளைச் செய்யவும் வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரிக்கவும் பல வெளிநாடுகள் முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (தி-61)

# கண்ணிவெடி ஒழிப்புப் பற்றிய சர்வதேச மாநாடு தாய்லாந்தில்

### தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் பங்கேற்பு

(கிளிநொச்சி)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள கண்ணிவெடி ஒழிப்புத்தொடர்பான சர்வதேச மாநாட்டில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் கி.பி.றெஜி கலந்து கொள்ளவுள்ளார்.

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகி எதிர் வரும் 21ஆம்திகதிவரை நடைபெறவுள்ள சர்வதேச கண்ணிவெடி ஒழிப்புக்கான சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு இவர் அங்கு சென்றுள்ளார்.

கண்ணிவெடி ஒழிப்பிற்கான ஒட்டவா உடன்படிக்கையில் கையெழுத்து இட்டுள்ள நாடுகளின் பிரதிநிதிகளும் கையெழுத்திடாத நாடுகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-64,10)

# போலியோ சொட்டு மருந்தை அனைத்துச் சிறார்களும் பெற வழிவகை

(சண்டிலிப்பாய்)

இவ்வருடம் வழங்கப்படவுள்ள போலியோ சொட்டு மருந்தினை, 10 வயதிற்குட்பட்ட சகல சிறுவர்களும் பெறும வகையில் அவர்களைத் தடுப்பு மருந்து வழங்கும் நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கு சுகாதாரத் தொண்டர்களின் பணி அவசியமானது.

இவ்வாறு பிராந்திய பதில் தொற்று நோயியலாளரும், சுகாதார வைத்திய அதிகாரியுமான டாக்டர் கே.கணேஸ்வரராஜா கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாய் வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச சுகாதாரத் தொண்டர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கூறியுள்ளார்.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால், வடக்கு-கிழக்குப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்த காரணத்தால் சரியான முறையில் தடுப்பு மருந்துகளைப்பெற்றுக் கொள்ளமுடியவில்லை.

இதனை ஈடுசெய்யும் நோக்குடன் இப போலியோ சொட்டு மருந்து மேலதிகமாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே, இந்த தடுப்பு மருந்து அனைத்துச் சிறுவர்களுக்கும் கிடைப்பதற்கு அனைவரும் தம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்யவேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (உ-252)

# நாரந்தனை சூரியவத்தையில் 50 வறிய குடும்பங்களுக்கு காணியுடன் வீட்டு வசதி

(ஊர்காவற்றுறை)

நாரந்தனைத் தெற்கு புதுக்குடியிருப்பு சூரியவத்தைப் பகுதியில் பேருட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 50 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட கிராமத்தில் வீட்டு வசதி அற்ற மிகவும் வறியகுடும்பங்களுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

மேற்படி 50 வீட்டுத்திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவு முடிவடைந்துள்ளதாகவும் விரைவில் குறிப்பிட்ட 50 குடும்பங்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பி-75)

## இன்று ஒரு தகவல்

# வேலைப்பளு

இல்லத்தரசி தொடங்கி மிகப் பெரிய அதிகாரி வரை, எல்லோருக்கும் இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை வேலைப் பளு என்பது தான். இந்த வேலைப்பளு ஏன் ஒரு சிக்க லாக மாறுகின்றது? வேலையை சரியாக பகீர்ந்து கொடுக்க நாம் மறந்து போகின்றோம் என்பது தான். உண்மையான சிக்கலே தவிர வேலைச் சிக்கல் அல்ல.

ஒரு மேலாளர் இருக்கிறார் என்றால் தன்னிடத்தில் இருக்கக்கூடிய அத்தனை பணியாளர்களிடத்திலேயும் அவர்கள் என்னென்ன வேலை செய்யவேண்டும் என்று அவர்களிடத்திலே பிரித்துக் கொடுத்தல். அப்படிப் பிரித்துக் கொடுப்பதினால் என்ன நன்மை? யாரிடத்தில் வேலையை கொடுக்கின்றோமோ? அவர்கள் அந்த வேலையை பொறுப்பாக முடிப்பார்கள்.

தன்னை நம்பி இந்தப் பணி கொடுக்கப்பட்டிருக்கின்றது என்கின்ற ஒரு எண்ணம் அவர்களை சிறப்பாக அந்த வேலையைச் செய்யத்தூண்டும். அப்படியில்லாமல் இதை செய் என்று கூறிவிட்டு அந்தப் பொறுப்பை அவர்களுக்குத் தராமல் விட்டோமென்றால் ''ஏன் செய்ய வேண்டும்? இதை செய்தால் எனக்கு என்ன பயன்'' என்கின்ற கேள்விகள் எல்லாம் உருவாகும்.

இப்படி நினைத்துப்பார்ப்போமே. வீட்டைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகின்ற ஒரு இல்லத்தரசி என்ன செய்யலாம், காலையில் கணவன் அலுவலகம் போனபின்னால் குழந்தைகள் பள்ளிக் கூடம் போனபின்னால் அந்தப்பெண் எல்லாவற்றையும் தானே தூய்மை செய்யத் தொடங்குகின்றாள். மாலையில் கணவரும் குழந்தைகளும் வரும் வரையில் தொடர்ந்து அந்தப் பணி அவளைச்சுமைப்படுத்துகின்றது. செய்கின்றாள், செய்கின்றாள் செய்து கொண்டே இருக்கின்றாள். ஆனால் மாலை கூட அந்தப்பணி முடியவில்லை.

என்ன அலுத்துக்கொள்கிறாள். ''ஐயோ! எனது வேலைப் பணி அதிகம்'' அதற்குப்பதிலாக இந்த இடத்தை தூய்மையாக வைக்க வேண்டியது உனது பணி என்று மகனையோ ,மகளையோ கூறியிருந்தால் மகனோ, மகளோ என்னசெய்வார்கள் இந்த இடத்தை நான் எவ்வளவு அழகாக வைத்திருக்கிறேன். நான்கு பேர் வீட்டிற்கு வரும் போது அப்பாவும் அம்மாவும் எல்லோரிடத்திலும் பாராட்டிப்பேசுவார்கள் எனக்கு நிறைய பாராட்டு கிடைக்கும் என்கின்ற ஒரு பொறுப்புணர்ச்சியில் மகனோ, மகளோ அந்த இடத்தை அழகுபடுத்துவார்கள். முதல் நாள் குப்பைகள் எல்லாம் அகற்றியவர்கள் மறுநாள் அந்த இடத்திலே ஒரு மலர் கொதததை வைத்து அலங்கரிப்பார்கள். இப்படி சிறிது, சிறிதாக அவர்களது பொறுப்பும் அதிகப்படும். அவர்களது பணியும் அதிகப்படும். என்ன நடக்கும் ஒரு இடத்தை மகளுக்கு ஒதுக்கிக் கொடுத்து, ஒரு அறையை மகனுக்கு ஒதுக்கிக்கொடுத்து இன்னொரு இடத்தை இன்னுமோர் உறவுக்காரருக்குக்கொடுத்து கடைசியில் அந்த வீடே முழுவதும் சுத்தமாக பிரகாசிக்கும்.

யாராவது வெளியிலேயிருந்து வந்தால் ''ஆகா! இவ்வளவு அழகாக இந்த வீட்டை வைத்திருக்கின்றீர்களே'' என்கின்ற ஒட்டுமொத்தமான பாராட்டை அந்த இல்லத்தரசி பெறுவாள். நினைத்துப்பாருங்கள் தன்னுடைய இடத்தில் இருக்கக்கூடிய வேலைப் பளு என்று தனக்குத்தானே சுமையாக மாற்றிக்கொள்வதைவிட அதைப் பங்கு போட்டு யார், யார் எதை எதைச் செய்ய முடியுமோ அதை அவர்களிடத்திலே கொடுத்து அவர்களுக்கும் இந்தப்பணியை சிறப்பாகச் செய்கின்றோம் என்கிற ஒரு முக்கியத்துவத்தை கொடுத்தால் அவர்களும் அதை சரியாகச் செய்வார்கள். மொத்தமான வேலையும் சிறப்பாக அமைந்துவிடும் இது தான் மிகப்பெரிய மேலாளர்கள் தங்கள் கீழே பணியாற்றக் கூடியவர்களிடத்திலே வேலை வாங்குகின்றமுறை. வேலை வாங்குவது என்பதைவிட எல்லோரும் இந்த வேலையைச் செய்வதினால் அவரவர்க்கு முக்கியத்துவம் கிடைக்கின்றது என்கின்ற பெருமிதத்தை வரச் செய்தால் எல்லா வேலையும் சுலபமாக முடிந்துவிடும்.

டாக்டர் சுதா

## எந்தக் கட்சியுடன் கூட்டமைத்தாலும்

# ஸ்ரீ.சு.க வின் தனித்துவத்திற்குப் பாதகம் இல்லை

## அடித்துக் கூறுகிறார் அனுரா

(கொழும்பு)

நாட்டில் உள்ள எந்தவொரு அரசியல் கட்சியுடனும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு ஏற்படுத்திக்கொண்டாலும் அது கட்சியை எந்தவிதத்திலும் பாதிக்காது என்று பொது ஜன ஐக்கிய முன்னணி எம். பி. அனுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஹம்பகா மாவட்ட இளைஞர் சம்மேளனத்தின மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அனுரா பண்டாரநாயக்க எம்.பி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இம் மாநாட்டில் ஹம்பகா மாவட்டத்தின் 13தொகுதிகளைச்சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

இன்றைய சூழ்நிலையில் ஐக்கிய தேசிய கட்சி அரசை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துத் தோற்கடிக்க முடியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி,ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தால் அக்கட்சி சுதந்திரக்கட்சியை அழித்து விடும் என்று சிலர் தெரிவித்தாலும் சுதந்திரக்கட்சியை எவராலும் அழிக்க



முடியாது என்றும் அனுராபண்டார நாயக்க தெரிவித்துள்ளார். (வ)

# பிரபல்யமான பாடசாலை அதிபர்கள் மீது

# இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

(கோட்டை)

நாட்டில் உள்ள பிரபல்யமான பாடசாலைகளைச் சேர்ந்த 17 அதிபர்கள் மீது இலஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவர்களில் மேற்கு மாகாணத்தைச் சேர்ந்த 7 அதிபர்கள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து இலஞ்ச விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை நடாத்தி வருகிறது.

இத் தகவலை துணைக்கல்விப் பணிப்பாளர் ஜே.எம்.சிறிசேன பிங்கிரியாவில் நடை பெற்ற பாடசாலை அதிபர்களின் கூட்டமொன்றில் வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் இது சம்பந்தமாக கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை அதிபர்கள் அர்ப்பணிப்புடன் கடமையாற்ற வேண்டும். நாட்டின் எதிர்கால சந்ததிகளுடனேயே வாழ்கிறவர்கள் என்ற முறையில் சமூகத்தை உயர்ந்த குணம் கொண்டவர்களாக வளர்த்தெடுப்பது அவர்கள் கடமை.

இவர்கள் தமது பதவிகளை துஷ்பிரயோகம் செய்தால் அது நாட்டின் துரதிஷ்டமாகும் எனத் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை,பிரபல்யமான பாடசாலைகள் பலவற்றின் அதிபர்கள் குறுகிய கால சேவைக்குள் பெரும் தனவந்தர்களாக மாறியிருக்கிறார்கள் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (பி)

## இராசி பலன்

**15. 09. 2003**

**(ஆவணி ~29,திங்கள்)**

**பஞ்சமி- வை- 5.29 வரை**
**பரணி - மு.இ. 12. 02 வரை**
**இராகுகாலம் - 7.33 - 09.03**
**சுபநேரம் - 12.03- 1.33**

**மஹாபரணி**

**மேடம்**
எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம், தனவரவு, ஜனவசியம்.

**இடபம்**
உணர்ச்சி வசப்படல், காரிய தாமதம், சுபசெலவு, ஆரோக்கியக்குறைவு.

**மிதுனம்**
தெய்வ சிந்தை, முயற்சி கைகூடும், நல்லவரவேற்பு, நல்ல வருமானம்.

**கடகம்**
பிறர் உதவி, செய்தொழில் விருத்தி, நல்ல செய்தி, காரிய அனுகூலம்.

**சிங்கம்**
சிந்தனை மிகுதி, உறவினர்சந்திப்பு, இடமாற்றம், புதிய திட்டமிடல்.

**கன்னி**
நண்பர் விரோதம், காரிய தடங்கல், உடல் வியாதி, வாகன பயம்.

**துலாம்**
தடைபபட்டகாரியம் கைகூடும், குடும்ப நலன், நல்ல வரவேற்பு, தொழில் விருத்தி.

**விருச்சிகம்**
நிலை மாற்றம், உடல் நலம், காரிய சித்தி, உற்சாகம்.

**தனுசு**
வியாபார நன்மை, அமைதிக்குறைவு, காரிய தாமதம், வேலையில் ஆர்வம்.

**மகரம்**
மாதா சுகம்,பெரியோர் வெறுப்பு,உடல் நிலைக்குறைவு,முயற்சி தாமதம்.

**கும்பம்**
எடுத்தகாரியம் கைகூடும், கூட்டு முயற்சி,பொருள் சேர்க்கை, தேக ஆரோக்கியம்.

**மீனம்**
அதிக வார்த்தை, காரிய தாமதம், எதிர் பாராத நன்மை, தனவிரயம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

## இலங்கை- இந்தியா இடையிலான

# பாலம் அமைக்கும் திட்டத்தை

# பரிசீலிக்கும் பணியில் அமெ. நிறுவனம்

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாலம் அமைக்கும் திட்டத்தை ஆராய்வதற்கு ''நெக்ஸன்ற் இங்'' எனும் புகழ் பெற்ற அமெரிக்கக் கட்டுமான நிறுவனம் முன்வந்துள்ளது.

இத்திட்டம் தொடர்பாக சில அடிப்படைத் தகவல்களையும் அது வழங்கியுள்ளது.

அதன்படி இத்தகைய ஓர் திட்டத்தை முன்னெடுக்க குறைந்தது 500லிருந்து 900 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று தெரிவித்துள்ள இந் நிறுவனம், இத்தகைய திட்டத்தில் பல இணைத்திட்டங்களை உள்ளடக்குவதன் மூலமே நீண்டகாலத்தில், செலவான பணத்தின் நன்மைகளை அடைய முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

இந் நிறுவனம் முன்மொழிந்துள்ள இணைத்திட்டங்களில் சில வருமாறு,

நான்கு பிரதான வீதிகள் கொண்ட, பணம் செலுத்திப் பயணிக்கும் பெரும் தெருக்கள்- மிகவேகமான புகையிரத பாதை-500 மேகா வாற்ஸ் மின்சக்தி குழாய்களை அமைத்தல்.

பைபர் பொருட்களை ஏற்றி பயணிக்கும் விசேட உபகரணங்கள்- இரு பக்கங்களிலும் மின் உற்பத்தி நிலையங்கள்- நிலவாயு குழாய்களை அமைத்தல்,

சுதந்திர வர்த்தக வலயங்களை அமைத்தல்- திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களுக்கு நேரடிப் பயணப்பாதைகளை அமைதல் மற்றும் பல உதிரித்திட்டங்களை இணைப்பதன் மூலம் பல அனுகூலங்களைப்பெற முடியும் என இந்நிறுவனம் ஆலோசனைத் திட்டத்தை வழங்கியுள்ளது.

இது குறித்த மேலதிகப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும்,மன்னார், கொழும்பு, திருகோணமலை ஆகிய நிலைகளை இத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

உலக வங்கி,ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பல தனியார் வைப்பு நிறுவனங்கள் இதற்கு நிதி உதவி வழங்கும் என்றும், இத்திட்டம் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் குறைந்தது 30 லிருந்து 36 மாதங்களில்,3 கட்டங்களாக இத்திட்டம் நிர்மாணிக்கப் படும் என்றும் இந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (தி)

# கல்முனை மாணவிக்கு ஒரு இலட்சம் நட்டஈடு

(கொழும்பு)

கடந்த 2002 ஏப்ரலில் நடைபெற்ற கா.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய கல்முனையை சேர்ந்த மாணவியின் இரசாயன பாட வினாத் தாள்களுக்குரிய 2 விடைத்தாள்களினை அகற்றி அதனை அம் மாணவியின் தந்தைக்கு தபால் மூலம் அனுப்பிய விவகாரம் தொடர்பாக, அம்மாணவிக்கு நட்டஈடாக ஒரு லட்சம் ரூபாவை வழங்குமாறு மேல் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

ருஸ்தா என்னும் மேற்படி மாணவி இது தொடர்பில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க பரீட்சைத் திணைக்களம் தவறியமை மாணவியின் அடிப்புடை உரிமை மீறப்பட்டதோடு, பாரபட்சம் காட்டும் செயலாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதிப்பரீட்சை ஆணையாளர் மேற் குறித்த விசாரணைகளை நடத்த தவறியமை காரணமாக பரீட்சை ஆணையாளரை அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜயசிறி,மேலதிக ஆணையாளர் பி.ஆர்.பீரிஸ்,பிரதிஆணையாளர் பண்டார ஆகியோர் உட்பட 17 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தனது விடைத்தாள்களில் இரண்டு அகற்றப்பட்டமை காரணமாகத் தான் இரசாயன பாடத்தில் குறைந்த புள்ளிகளைப் பெற நேர்ந்ததாகவும் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க பரீட்சை ஆணையாளா தவறிவிட்டதாகவும் அம் மாணவி குறிப்பிட்டுள்ளார். (உ-6)

# யாழ்.பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் முதலாவது சங்கமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் முதலாவது சங்கம் நிகழ்வு நேற்று முன்தினம் பி.ப. 3.00மணியளவில் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் தேசிய எழுச்சிப்பேரவையின் யாழ் .பிரதேச செயலாளர் த.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக பொதுச் சுடரினை மகளிர் பிரிவு உறுப்பினர் சாரதா, மாவீரனின் தந்தையார் லோறன்ஸ ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக் கொடியினை யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து அக வணக்கம் இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கயல்விழி ,கோட்டச் செயலாளர் சி.வி.கே.சிவஞானம், மாவட்டச் செயலாளர் சூ.சிறில், மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச்சேர்ந்த க.சிவராசா, யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுபபாளர் ஈஸ்வரன் ஆகியோர் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

தொடர்ந்து யாழ். பிரதேசத்தில் நிலவும் பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பான முன் மொழிவுகள் ஊரக கிளைகள்ஊடாக முன் வைக்கப்பட்டன.

சமூக நலன் சார் முன்மொழிவுகள தொடர்பாக கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் பதிலளிக்கையில்,முன்மொழியப்பட்ட விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடித்தீர்வு காணப்பட நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார். (உ-4)

உள்ளத்தால் பொய்யா தொழுகின்
உலகத்தார்
உள்ளத்து எல்லாம் உளன்.
-குறள்-

வலம்புரி

## உண்மையை உரைத்த அகாஷி

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இன்னமும் இயல்பு நிலை ஏற்படவில்லை. இவ்வாறு கூறியிருப்பவர் யப்பான் நாட்டு விஷேட தூதுவர் யசூஷி அகாஷி. கொழும்பில் நடந்த நிதியுதவி மீளாய்வுக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த தூதுவர் அகாஷி, கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த பின்னர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த தூதுவர் அகாஷி அங்கு முஸ்லிம் தலைவர்களை சந்தித்து அங்குள்ள நிலைமைகளை கேட்டறிந்து கொண்டார்.

இச் சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இடம் பெற்ற முஸ்லிம் இளைஞர்களின் படுகொலை மற்றும் கடத்தல் சம்பவங்கள் குறித்து அகாஷிக்குக் கூறிய முஸ்லிம் தலைவர்கள் விடுதலைப் புலிகளையே குற்றம் சாட்டியுள்ளனர். எனினும் தூதுவர் அகாஷி புத்திசாலித்தனமாக நடந்து கொண்டார். அதாவது முஸ்லிம் தலைவர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை அவர் உற்றுக் கேட்டுக் கொண்டாலும் விடுதலைப் புலிகள் மீது எத்தகைய கண்டனங்களையும் முன்வைக்காமல் வடக்குக் கிழக்கில இன்னமும் இயல்பு நிலை ஏற்படவில்லை என்பதை மட்டும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

# தமிழனின் தனித்துவத்தை உணர்த்திய இலக்கியவாதி பேரறிஞர் அண்ணா

அரசியல் வானில் பறந்தவர்கள் இலக்கிய வானில் சிறக்கவில்லை. பேச்சாளராக மிளிர்ந்தவர்கள் எழுத்தாளர்களாக ஒளிரவில்லை.

ஆனால் பேரறிஞர் அண்ணா அரசியல், இலக்கியம், பேச்சு, எழுத்து ஆகியவற்றில் ஈடுஇணையற்றவராக



விளங்கினார்.

தந்தை பெரியார் ஈ.வே.ரா-வின் பகுத்தறிவுப் பிரசாரத்தால் அறிமுகமான அண்ணா, அரசியல் இலக்கியம், கலை முதலிய துறைகளிலும் அரும்பணி ஆற்றியுள்ளார். இவரது எழுத்தும் பேச்சும் சென்னை பச்சையப்பன் கலலூரியில் படிக்கும் காலத்திலேயே பிரபலமாகி இருந்தது. இவற்றை வளர்ப்பதற்கு அவரது ஞாபகசக்தி மிகவும் உறுதுணையாக விளங்கியது.

அழியாத இலக்கியங்களை உருவாக்குவதற்கு ஓர் இலக்கிய கர்த்தாவுக்குத் தேவையானது நல்ல ஓய்வும் அமைதியான சூழ்நிலையுமே ஆகும். அண்ணாவின் வாழ்க்கையை அதிகமான அரசியல் போராட்டங்களும அமைதியற்ற சூழ்நிலையுமே ஆக்கிரமித்துக் கொண்டன.

அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அவர் தமிழ் இலக்கியத்திற்கு

மாஜிக் கடவுள்கள், ரோமாபுரி ராணிகள், ஆரிய மாயை, விடுதலைப்போர் போன்றவை அரசியல் நூறகள் அரசியலோடு பின்னிப் பிணைந்த சமயத் தலைவர்கள், அரசிகளின் படாடோபம், சமயப் போர்வை, விடுதலை உணர்வு ஆகியன இவைகளின் பொருளாக அமைநதன.

குமரிக்கோட்டம், ரங்கோன் ராதா, கபோதி புரக்காதல், குமாஸ்தாவின் பெண், ஓர் இரவு போன்றனவற்றோடு மற்றும் நூற்றுக்கணக்கான சிறுகதைகளும் ஓரங்க நாடகங்களும் சமுதாயத்தின் நிலையை விளக்குவனவாகும்.

1948ல் அண்ணா தீட்டிய ''பணத்தோட்டம்'' அதே ஆண்டில் அவர் எழுதிய ''ஜமீன் ஒழிப்பு'' நாட்டின் பொருளாதாரச சீர்கேட்டையும் நிலப் பிரபுத்வக் கொடுமையையும் புள்ளி விபரங்களோடு விளக்குவனவாக இருந்தன. பணத்தோட்டத்தைப் படித்தவர்கள் தனியரசுக் கோரிக்கையின் நன்மையை உணர்ந்தனர்.

''ரோமாபுரி ராணிகள்'' ரோமாபுரி ராணிகளின் செல்வச் செழிப்பையும் இன்பக்கேளிக்கைகளையும் காட்டுவதாகும். ராணிகளின் லீலா விநோதங்களையும் சரசங்களையும் அகப்பொருள் இலக்கியப் பாணியிலேயே எழுதியுள்ளார். அண்ணாவின் சுவை, சுகமிக்க வரிகள் படிப்போரைக் காந்தமென இழுத்தன. அதனை வாசித்த சிலர் அண்ணாவை ஆபாச எழுத்தாளன் எனவும் வர்ணித்தனர். அந்தளவிற்கு மேல்நாட்டு நிகழ்ச்சிகளை மிகச சரளமாக எழுதியிருந்தார். ''காலை

**இன்று அறிஞர் அண்ணாவின் பிறந்த தினம்**

14 அல்பேனியாவுக்குச் சமம், 4ஆஸ்டிரியா, 10 பெல்ஜியம், 2செக்கோஸ்லவேகியா, 3கிறீஸ், 4அயர்லாந்து, 10 ஹொலந்து, 4போர்த்துக்கல், 14பலஸ்தின நாடுகளுக்குச் சமம்'' எனக் குறிப்பிட்டு இத் துணைப் பெரிய திராவிடம் ஏன் தனியரசாக விளங்கக்கூடாது எனக் கேள்வி எழுப்பி இருந்தார்.

தமிழ் உரைநடையில் ''அண்ணாவின் சகாப்தம்'' எனக் கூறுமளவுக்கு அவரது உரைநடை மறுமலர்ச்சி அடைநதிருந்தது.

படிப்பவர் உள்ளத்தைப் பாகாய் உருககிடும் நவீனம் ''கபோதிபுரக் காதல்'' பணத்தாசை கொள்ளும் பெற்றோருக்குப் பயங்கரமான எச்சரிக்கை தருகிறார்.

கலிங்கராணி, பார்வதி பி.ஏ. போன்றன சமூகச் சித்திரங்களாகும். பார்வதி பி.ஏ-யில் கதை நகர்த்தலைவிட கொள்கை விளக்கம் மிக அற்புதமாக அமைந்துள்ளது.

''குமாஸ்தாவின் பெண்'' ஒரு விமர்சனக் கட்டுரை நூலாகும். கதையோட்டமாகவே செல்கிறது. சமூக நலங்களை மிகத் திறமையாகத் தருவதோடு மிகச் சிறந்த விமர்சகர் என்பதையும் நிலைநாட்டியுள்ளார். விமர்சனம் எழுதுபவர்களுக்குச் சிறந்ததோர் வழிகாட்டி நூல்.

சிறுகதை உலகில் அண்ணாவழி தனிவழியாகும். அண்ணாவின் ''செவ்வாழை'' இதனை உறுதிப்படுத்தும் வாசித்த எவர் மனதையும் விட்டு நீங்காத ஓர் அற்புதக் காவியம் அது! ஏழையின் ஆசையில் இடிவிழும் நிலையை அழகாக மனதைத் தொடும் விதத்தில் காட்டியுள்ளார். கதையின் முடிவு வாசகரின் கண்ணீரைக் காணிக்கையாக்குகிறது!

''செவ்வாழை'' துன்பியல் கதைக்கு ஓர் எடுத்துக்காட்டு. தமிழர் சமுதாயக் காலக்கண்ணாடி! தமிழர் நிலையின் இதயத்துடிப்பு!

''பணத்தோட்டம்'' பொருளாதார மாணவர்கள் வாசிக்க வேண்டிய நூல். தமிழரின் பொருளாதார எழுச்சிக்கு வழிகாட்டும் பனுவல்.

தமிழரைக் கவ்வியிருக்கும் ஆரிய மாயையில் இருந்து விடுபட ''ஆரிய மாயை'' நூலை தமிழர் படிக்க வேணடும். நாட்டுவிடுதலை உணர்வுக்கும் அது வழிவகுக்கும். ''விடுதலைப் போரினை'' இது இலகுவாக்கும்.

சட்டசபைச் சொற்பொழிவுகள் பாகம் I, II, தம்பிக்கு 23பகுதிகள் யாவும் வாசிக்கப் பெற்றால் தமிழ் உணர்வு, இனமானம் வரும். தமிழர் தம் பழைமை உணர்ந்து, விடுதலை பெற நல்லுரம் பெறுவர்.

சாக்கடையைச் சுத்தம் செய்யும் போது, வாரி வெளியில் போடும் கழிவுப் பொருட்கள் அருவருப்பாக இருக்கும் அது போல், அண்ணாவால் எடுத்து வழங்கப்பட்ட சில விபரங்கள் கசப்பாக இருககலாம். ஆனால், வரலாற்று நிகழ்வு

**அ.பொ.செல்லையா**

களை அறிந்து, தமிழ் இனமான உணர்வோடு அவற்றைப் புரிந்து தனித்துவம் பேணவேண்டும் என்ற உணர்வோடு செயலாற்ற வேண்டும்.

''ஆண்ட இனம், மீண்டும் ஆள நினைப்பதில் என்ன தவறிருக்கிறது?'' என்ற அண்ணாவின் வரலாற்று உரையினை உள்ளத்தில் பதித்து, தமிழர் தமிழராக வாழ்ந்திடும் தனித்துவத்தை அடைந்திட அண்ணாவின இலக்கியங்கள் வழிவகுக்கும்.□

புலிகள் மீது எத்தகைய கண்டனங்களையும் முன் வைக்காமல் வடக்குக் கிழக் கில இன்னமும் இயல்பு நிலை ஏற்படவில்லை என்பதை மட்டும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

அகாஷியின் மேற்போந்த கருத்து தமிழ்-முஸ்லிம் தலை வர்களைச் சந்தித்த பின்னர் கூறப்பட்டதாயினும் வடக்குக் கிழக்கில் இன்னமும் இயல்பு நிலை ஏற்படவில்லை என்ற முடிவை முஸ்லிம் தலைவர் கள் முன்வைத்த கருத்தை அடிப்படையாகக் கொண்டே அகாஷி கூறியுள்ளார் என் பதை உணர முடிகிறது.

வடக்குக் கிழக்கில் இயல்பு நிலை ஏற்படவில்லை எனக் கூறிய அகாஷி, இயல்பு நிலையை ஏற்படுத்த அரசும் விடுதலைப் புலிகளும் முன் வர வேண்டும் எனக் கூறிய தில் இருந்து அவரின் நிலைப் பாடு புலப்படுகின்றது.

வடக்குக் கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டு மாயின் அதனை அரசே செய்ய வேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் தமிழர்களின் குடியிருப்புப் பிரதேசங்கள் இராணுவத்தால் ஆக்கிரமிக் கப்பட்டுள்ளது. இதனால் தமிழ் மக்கள் சொந்த மண் ணிலேயே அகதிகளாக்கப் பட்டுள்ளனர். அத்துடன் இடம் பெயர்ந்த மக்கள் மீண் டும் தமது வாழ்விடங்களுக் குச் செல்ல முடியாத நிலை யில் உள்ளனர். அதற்குக் காரணம் இவர்களின் சொந்த இல்லிடங்கள் இராணுவ நட வடிக்கையால் அழிந்து போன மையேயாகும். ஆனாலும் அவறறைப் புனரமைத்து மீள குடியமர்த்தலுக்கு ஏற்ற வழி வகைகள் எதுவும் மேற் கொள்ளப்படவில்லை. எனி னும் இது விடயங்களை தூது வர் அகாஷி ஏற்றுக் கொள் வாரா என்பது கேள்விக்குரியதே.

வுக்குத் தேவையானது நல்ல ஓய் வும் அமைதியான சூழ்நிலையுமே ஆகும். அண்ணாவின் வாழ்க்கையை அதிகமான அரசியல் போராட்டங்களும அமைதியற்ற சூழ்நிலையுமே ஆக்கிர மித்துக் கொண்டன.

அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தி யிலும் அவர் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றியுள்ள தொண்டு தமிழ் உள்ள ளவும் மறக்க முடியாதது. அவரது படைப்புக்கள் பல காலத்தால் அழியா தவை.

அவரது அமைதியற்ற சூழ்நிலையி லும் அவர் உயர்ந்த இலக்கியங் களைஉருவாக்கினார். அவைஅவரது அறிவாற்றலுக்குச் சான்றாகும்.

ரோமாபுரி ராணிகள், கம்பரசம், குமரிக்கோட்டம், கற்பனைச் சிததிரங் கள், மாஜிக் கடவுள்கள், பார்வதி பி.ஏ. ரங கோன் ராதா, கலிங்கராணி, சிறுகதை கள், கபோதிபுரக் காதல், விடுதலைப் போர், வானொலியில் அண்ணா, எமிலி ஜோலா, மேதினம், ஏ தாழ்ந்த தமிழகமே, புராணமதங்கள், செவ்வாழை, குமாஸ்தாவின பெண், ஓர் இரவு, வேலைக்காரி, நல்ல தம்பி, பணத்தோட்டம், ஆரியமாயை, உலகப் பெரியார் காந்தி, வளம் காண வழி, சட்டசபைச் சொற்பொழிவுகள், தம்பிக்கு (23பகுதிகள்) ஆகியன மட் டுமல்ல பட்டியல் மேலும் நீளும்! அவரது உரையாடல்கள், மேடைப்பேச சுக்கள் எல்லாம் தனித்தனி புத்தகங் களாக வந்துள்ளன. ‘‘காஞ்சி ’’வார இதழில் அவர் கடைசியாக எழுதிய ‘‘தம்பிக்கு” அதுவே ஒரு தனி நூலாக வெளிவந்துள்ளது.

அரசியல், சமூகம், பொருளாதாரம், வரலாறு, பகுத்தறிவு அனைத்துமே அண்ணாவின் நூல்களில் காணலாம்.

பொருள் இலக்கியப் பாணியிலேயே எழுதியுள்ளார். அண்ணாவின் சுவை, சுகமிக்க வரிகள் படிப்போரைக் காந்த மென இழுத்தன. அதனை வாசித்த சிலர் அண்ணாவை ஆபாச எழுத்தா ளன் எனவும் வர்ணித்தனர். அந்தள விற்கு மேல்நாட்டு நிகழ்ச்சிகளை மிகச சரளமாக எழுதியிருந்தார். ‘‘காலை மலர்ந்ததே, என் களிப்பும் உலர்ந ததே!”, ‘‘கண்ணாளா நாளையும் வா! உன் நண்பனையும் கூட்டிவா” என்பன போன்ற வரிகள் எவரையும் சுண்டி இழுக்கக்கூடியதாக இருந் தன!

மாஜிக் கடவுள்கள் என்பது பல ஆயி ரம் ஆண்டுகளுக்கு முந்திய கிரேக்க நாட்டு வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். நெப்டியூன், யூபிட்டர், யுரேஸ் போன்ற தெய்வங்கள் எவ் வாறு அங்கு வணங்கப்பட்டு இன்று வெறும் காட்சிப் பொருட்களாகிவிட்டன என்பதனை விளக்கி, நமது நாட்டுத் தெய்வங்களின் வழிபாட்டுடன் ஒப்பிட் டுக் காட்டியுள்ளார். வேறெந்த ஆசிரி யனும் செய்யாத சமுதாய சீர்திருத்த மாகவே கருதினார்.

அண்ணாவின் ‘‘ஆரியமாயை” எவரா லும் மறுக்கமுடியாத வரலாற்று ஆராய்ச் சிகளை அடிப்படையாகக் கொண்ட தாகும் தடை செய்யப்பட்டதாக இருநதது. பின்னர் பல பதிப்புகளும் வெளிவந்தது.

‘‘விடுதலைப் போர்’’என்ற நூல் 1947இல் வெளிவந்தது. மிகவும் விறு விறுப்பான நூல். உலக வரலாறே அடங்கி இருந்தது. பிரிவினைக்கு அவர் காட்டிய ஆதாரங்கள் ஆணித்தர மானவை. ‘‘நாம் கேட்கும் திராவிட நாடு 1,42,000 சதுரமைல் பரப்புள்ளது. இது இங்கிலாந்திற்கு இரண்டு மடங்கு,

சிறுகதை உலகில் அண்ணாவழி தனிவழியாகும். அண்ணாவின் ‘‘செவ்வாழை” இதனை உறுதிப்படுத்தும் வாசித்த எவர் மனதையும் விட்டு நீங்காத ஓர் அற்புதக் காவியம் அது! ஏழையின் ஆசையில் இடிவிழும்

நினைப்பதில் என்ன தவறிருக்கி றது?” என்ற அண்ணாவின் வரலாற்று உரையினை உள்ளத்தில் பதித்து, தமிழர் தமிழராக வாழ்ந்திடும் தனித் துவத்தை அடைந்திட அண்ணா வின இலக்கியங்கள் வழிவகுக்கும்.□

## கர்மாவின் கோட்பாடு

**தினசரி தியானம்**

இயற்கை நிகழ்வுகள் அனைத்தும், காரண காரியத் தொடர்பின் விதி அல்லது கர்மாவின் விதி என்ற ஒரு விதியினால் ஆளப்படுகின்றன. இவ் அண்டத்தின் சுமுகத் தன்மைகளையும், நியாயங்களையும் நிலைத்திருக்கச் செய்வது இவ் விதியே. ஒருவர் எதை விதைக்கிறாரோ அதைத்தான் அறுவடை செய்யவேண்டும். ஒழுக்கமான் செயல்கள் நற்பலன்களைத் தருகின்றன. ஒழுக்கக்கேடான செயல்கள் மாறான பலன்களைத் தருகின்றன. கர்மவிதிதான் வேறுபாடுகளுக்கும், ஏற்றத்தாழ்வுகளுக்கும் காரணமாகும்.

**சுவாமி சிவானந்தர்**

## முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவுத் திட்டம்

(சுதுமலை)

கியூடெக் நிறுவனத்தின் அனுசரணை யுடன் வலி-தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சாவல்கட்டுப் பகுதி யில் 4முன்பள்ளிகளுக்கு இலவச சத துணவு வழங்கப்படவுள்ளது.

இதற்கான துரிதநடவடிக்கைகளை சாவல்கட்டு மலர்வு மையம் மேற் கொண்டு வருகின்றது.

மேற்படி பகுதியில் மிகவும் வறிய நிலையில் வாழும் 3வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட சுமார் 140 ற்கு மேற்பட்ட சிறுவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறவுள்ளனர்.

மேற்படி சிறுவர்களின் போஷாக்கு மட்டம் மிகவும் குறைவான நிலையில உள்ளதாகவும், இந்நிலை மாற்றிய மைக்கப்பட மேலதிக உணவு வழங் கப்பட வேண்டும் எனவும் மானிப்பாய சுகாதார வைத்திய அதிகாரி சுட்டிக் காட்டியதையடுத்தே இச்சத்துணவுத் திட்டம் முன்பள்ளிகளூடாக செயற் படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக் கது.

இலவச சத்துணவு வழங்கும் இத் திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் போஷாக்கு மட்டத் தில் நல்ல மாற்றம் ஏற்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. (உ-252)

## சமுர்த்தி உயரதிகாரிகள் குழு ஊர்காவற்றுறை விஜயம்

(ஊர்காவற்றுறை)

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை யின் உயர் அதிகாரிகள் குழுவொன்று அண்மையில் ஊர்காவற்றுறைக்கு விஜயம் செய்துள்ளது.

சமுர்த்தி அதிகார சபையின் நிதி நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர் லியன்வெல தலைமையிலான மேற் படி குழுவில் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வர குமார் அடங்கலாக மற்றும் பல பிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர்.

இக்குழு, ஊர்காவற்றுறையில் சமுர்த்தி வங்கிச் சங்கக் கட்டடம் அமையவுள்ள காணியைப் பார்வை யிட்டு, அந்த இடத்தின் அமைவு பொருத தப்பாடாக உள்ளது என விளக்கியது டன், அவ்விடத்தில் சமுர்த்தி வங்கிச் சங்கம் கட்டுவதற்குரிய அனுமதியை யும் வழங்கியுள்ளதாகத் தெரியவருகி றது.

அத்துடன், நாரந்தனை மத்தியில் சமுர்த்தி அதிகார சபையின் நிதியுத வியுடன் புனரமைக்கப்படவுள்ள குடி நீர்க் கிணறையும் மேற்படி குழுவி னர் பார்வையிட்டுள்ள அதேவேளை, தற்போது ஊர்காவற்றுறையில் சமுர்த்தி வங்கிச் சங்கம் இயங்கிவரும் இடம் மற்றும் கடந்த மே மாதம் இடம்பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி. தி.ஜெகத்ஜனனியின் படுகொலை நிகழ்ந்த இடத்தையும் பார்வையிட்டு ள்ளதாகத் தெரியவருகிறது.

(உ-75)

## யாத்திரீகர்கள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

தீவக யாத்திரைத் தலமான சாட்டி புனித சித்தாத்திரை அன்னை ஆலயத் திற்குச் செல்வதற்குரிய 779ஆம் இலக்கப் பேருந்துச் சேவை நடை பெறாததால் யாத்திரீகர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவ தாகத் தெரியவருகிறது.

அதேவேளை, எதிர்வரும் 20ஆம் திகதி மேற்படி ஆலயத்தின் வரு டாந்தத் திருவிழா இடம் பெறவுள்ளது. குறிப்பிடத்தக்கது. (பி)

# சமாதானத்தை எதிர்த்து மீண்டும் ஜே.வி.பி ஊர்வலம்

## கண்டியில் இருந்து கொழும்பு வரை நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

அண்மையில் காலியில் இருந்து கொழும்புக்கு ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியதைப் போன்று அடுத்து கண்டியில் இருந்து கொழும்புக்கு ஒரு பேரணியை நடாத்த ஜே.வி.பி. ஆயத்தமாகி வருகிறது. சமீபத்தில் நடைபெற்ற கூட்டுச் சேரும் முயற்சி தோல்வியுற்றதை தொடர்ந்து தற்போது ஜே.வி.பியும், பொ.ஐ. முன்னணியும் பிரிந்து தத்தமது பாதைகளில் செயற்படுவதுஎன தீர்மானித்துள்ளன. அத்துடன் சிறிலங்கா சுதந்திர கட்சியினுள் உட்கட்சிப் பூசல் எழுந்துள்ளது.மேற்குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கு கட்சிப்பூசல் பெரும் தலையிடியை கொடுத்துள்ளது.

தற்போது சிறிலங்கா சுதந்திர கட்சியினுள்ளே அனுரா பண்டார நாயக்கா தலைமையிலான ஒரு தொகுதியினர் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேருமாறு வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒரு தொகுதியினர் கூட்டுச் சேருவதை எதிர்த்து வருகின்றனர்.சரத் அமுனுகம, மங்கள சமரவீர,டிலான் பெரேரா போன்ற சிரேஷ்ட சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களும் ஏனைய சிலரும் ஜனாதிபதி ஜே.வி.பியுடனான பேச்சுளை இடைநிறுத்த எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என விரும்புகின்றனர்.

ஜே.வி.பியுடன் ஏற்படுத்தும் கூட்டு சமாதான பேச்சுக்களின் முறிவிற்கே வழிவகுக்கும் என கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது. இதே போன்று ஜே.வி.பியுடன் கூட்டுச் சேருவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என சிறிலங்கா சம சமாஜக் கட்சி தலைவர் பட்டிவீரக்கோன் கேட்டுள்ளார். (த)

# பாக்.இராணுவ அதிகாரிகள் நேற்று இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தான் கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் மொஹமட் அசிஸ் பார்க் தலைமையில் ஐந்து இராணுவ உயர் அதிகாரிகள் நேற்று பிற்பகல் கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர்.

கொழும்பு வந்து சேர்ந்துள்ள பாகிஸ்தான் கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் மொஹமட் அஸீஸ் பார்க் மற்றும் ஐந்து இராணுவ உயர் அதிகாரிளும் இலங்கையின் முப்படைத் தளபதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

# மன்னார் மடுவீதி திறப்பு தீர்மானம் இன்று அறிவிப்பு

(கொழும்பு)

மன்னார-மடு வீதியை பொது மக்களின் போக்குவரத்துக்காக அடுத்த சில தினங்களில் திறக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் எக்னல் பிறகாரெட்டி தெரிவித்துள்ளார்.

இவ்வீதி பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்படுவது குறித்த இறுதித் தீர்மானம் இன்று அறிவிக்கப்படவுள்ளது.

கடந்த பல மாதங்களாகப் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்த இவ்வீதி ஊடாக மடுத் தேவாலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், இவ்வீதி மூடப்பட்டதன் காரண்மாக மடுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து இராணுவ, அரச அதிகாரிகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி-61)

---

### தியாகி திலீபன்...

ளும் இடம்பெறும்.

இதேவேளை திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த நல்லூர் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு அருகில் நினைவு நிகழ்வுகள் இடம்பெறும்.

நினைவு தினத்தின் இறுதி நாளில் அடையாள உண்ணாவிரத நிகழ்வும்

# கிரிக்கெற் சபைக்கு பெயர் மாற்றம்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை, சிறிலங்கா கிறிக்கெற் என பெயர் மாற்றப்படவுள்ளது. நேற்று நடை பெற்ற கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விசேட கூட்டத்தின் போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனை பணிப்பாளர்கள் சபை நிர்வகிக்கும் தலைவர் மற்றும் தெரிவு செய்யப்பட்ட இரண்டு உப தலைவர்கள், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இதில் அங்கம் வகிப்பர். (ந-5)

---

### யப்பான்...

கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகப் பணிமனையில் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது சமாதான முயற்சிகள் குறித்தும், டோக்கியோ நிதி உதவி வழங்கும் நாடுகளின் மீளாய்வுக் கூட்டம் குறித்த முடிவுகள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டுள்ளது. (ம)

---

### சிங்கள...

பட்டனர்.

உள்நோக்கங்கள் பலவற்றைக் கொண்ட இந்த விளையாட்டு விழா நடத்தப்படுவதை எம்மால் ஒரு போதுமே அனுமதிக்க முடியாது எனக் கூறிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது நிலைப்பாடு தொடர்பாக விளக்கமளிக்கையில்;

நீண்ட கால அடக்குமுறையில் இருந்து விடுபடுவதற்காக எமது இனம் போராடி அதன் பலனாக சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகியிருந்த வேளை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசு நடந்து கொள்ளாததன் காரணத்தால் பேச்

# ஆலய திருவிழாவில் கோஷ்டி மோதல்

## இருவருக்கு வாள் வெட்டு

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை வடக்கு மனோன்மணி ஆலய் திருவிழாவின் போது இரு குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் நாரந்தனை வடக்கைச் சேர்ந்த அ.இராமலிங்கம்(வயது-54), சிவேந்திரன் ஆகிய இருவருமே வாள்வெட்டில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-7)

# இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு இளைஞர்கள் முன்வரவில்லை

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கு 4 ஆயிரம் பேரை இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்த போதும் இதுவரை அரைவாசிப்பேர் கூட இராணுவத்தில் இணைய முன்வரவில்லை.

ஆட்சேர்ப்பு நடவடிக்கை 25 நாட்களைக் கடந்துள்ள போதும் இதுவரை ஆயிரத்து 900 பேரே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தற்போது படையில் சேவையாற்றுபவர்கள் தமது குடும்பத்தில் ஏனைய உறுப்பினர்களையும் படையில் சேரும்படி ஒருபோதும் தூண்டுவதில்லை. அவர்கள் கூடிய வசதிகள் உள்ள வேறு தொழில்களுக்குச் செல்லலாம் என்று நினைக்கின்றனர். அரசாங்கம் இப்போதாவது சம்பள உயர்வுகள் போன்ற வசதிகளை அளிக்க முன் வந்தால் பலர் சேவையில் இணைவார்கள் என இராணுவ அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த)

---

### இடைக்கால சபைக்கான..

போது யப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற மாநாட்டிலும், அண்மையில் கொழும்பில் நடைபெற்ற மீளாய்வு மாநாட்டிலும் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாமைக்கான காரணங்களை விளக்கிக் கூறியுள்ளதோடு அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தை ஏன் இடைநிறுத்தப்பட்டது என்பது பற்றியும் தூதுவரிடம் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளோம்.

சர்வதேச சமூகம் பெருமளவான பொருளாதார உதவிகளை செய்வதற்கு முன்வந்ததையிட்டு தாம் மகிழ்ச்சி அடைந்தாலும் தமிழர் தாயகப் பிரதேசத்திற்கும் தமிழ் மக்களுக்கும் நன்மைகள் அளிக்கக்கூடிய வகையில் சர்வதேச சமூகம் செய்யும் உதவி எமது மக்களுக்குச் சரியான முறையில் வந்து சேரும் என்னும் உறுதிப்பாடு இல்லாத குழப்பமான சூழ்நிலை இருக்கிறது.

யுத்தத்தினால் சீரழிந்து போயுள்ள

படுத்தியுள்ளோம் என்றும் தமிழ்ச்செல்வன் கூறினார்

இச்செய்தியாளர் மாநாட்டில் கிண்ணியா குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த தமிழ்செல்வன் இது தேவையற்ற விடயமாகும் காலம் காலமாக எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்த இடமே இது. இது இப்போது செய்தி கவர்ச்சிக்காக பேசப்பட்டு வருகின்றது. தென்னிலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தையை குழப்புபவர்களே அதைப் பெரிதுபடுத்துகிறார்கள். இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவினரை விரைவில் சந்திக்கவுள்ளோம்.

**பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் புதிய முகாம் தேவையில்லை**

திருகோணமலையில் புதிய முகாம்கள் எதுவும் அமைக்கப்பட வேண்டிய தேவை எமக்கு இல்லை தமிழர் தாயகத்தின் பெரும்பாலான

னைக்காகத் திறந்து விடப்படுவது குறித்த இறுதித் தீர்மானம் இன்று அறிவிக்கப்படவுள்ளது.

கடந்த பல மாதங்களாகப் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்த இவ்வீதி ஊடாக மடுத் தேவாலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், இவ்வீதி மூடப்பட்டதன்

## தியாகி திலீபன்...

ளும் இடம்பெறும்.

இதேவேளை திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த நல்லூர் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு அருகில் நினைவு நிகழ்வுகள் இடம்பெறும்.

நினைவு தினத்தின் இறுதி நாளில் அடையாள உண்ணாவிரத நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (த-4,43)

# புலிகளின் வசமுள்ள...

தேவைகள், தந்திரோபாய மட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றை பாதுகாப்பு அமைச்சிற்கு வழங்கியிருந்தது.புலிகள் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ள நிலையில் ஐ.தே.முன்னணி அரசுக்கும் எதிர்க் கட்சியினருக்கும் இடையே எழுந்துள்ள சர்ச்சையின் மத்தியில் இந்த அறிக்கை முக்கியத்துவம் பெறுகின்றது.

இதேவேளை திருகோணமலையின் தென்பகுதியில் இருந்து கொண்டு இலங்கைக் கடற்படைக்கு மிக முக்கியமான,திருகோணமலைத் துறைமுகத்திற்கு வரும் கப்பல்கள் யாவற்றையும் புலிகளால் கண்காணிக்க முடியும். தற்கொலைத் தாக்குதல்களினாலேயோ,ஆட்டிலறித் தாக்குதலினாலேயோ, கடற்படைத் தளத்தின் மீது தாக்குதல் தொடுக்க முடியும்.இவ்வாறு கூறப்பட்டிருந்த அந்த அறிக்கையில் இந்த நிலைமையை மாற்றி அமைப்பதற்கு பல யோசனைகளும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

(த)


புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆவணி மாதம் 29-ம் நாள் (15.09.2003) திங்கட்கிழமை பகல் 12.03 மணி முதல் ஒரு மணிவரையில் வரும் பரணி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

"இலக்கியன் புடவை மாளிகை"

ELAKIYAN TEXTILE

என்னும் ஸ்தானத்தைத் திறந்து நடாத்த நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் தாங்கள் கலந்து கொண்டு இவ்விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

R.ஸ்ரீபன்

(City Boy Tailors)

இல. 29, 2-வது புதிய சந்தை, யாழ்ப்பாணம்.

No.29,2nd Modern Market, Jaffna.

(ராசி சில்க் முன்பாக) (7465)


எனக் கூறிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது நிலைப்பாடு தொடர்பாக விளக்கமளிக்கையில்;

நீண்ட கால அடக்குமுறையில் இருந்து விடுபடுவதற்காக எமது இனம் போராடி அதன் பலனாக சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகியிருந்த வேளை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசு நடந்து கொள்ளாததன் காரணத்தால் பேச்சுக்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

எமது இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டு சுய நிர்ணய உரிமைகள் பறிக்கப்பட்டு இராணுவ நெருக்குவாரங்கள் அதிகரித்துள்ள இந் நிலையில் இவற்றில் இருந்து விடுபட நாம் பல வழிகளில் குரல் கொடுத்து வருகின்றோம்.

இந் நிலைமைக்கு மாறுதலாக இயல்பு வாழ்வு ஏற்பட்டுவிட்டகட என்ற தோற்றப்பாட்டை வெளியுலகுக்குக் காட்டும் வகையிலேயே இந்த விளையாட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தவிர, எமது பிரதேச விளையாட்டு வீரர்களுக்கோ அன்றி மக்களுக்கோ ஒரு நல்ல எதிர் காலத்தை ஏற்படுத்தும் விதமாக இது ஏற்பாடு செய்யப்படவில்லை.

நிரந்தரமான ஓர் சமாதானம் ஏறபட்டு இயல்பு வாழ்வு தோற்றுவிக்கப்படும் வரை இவ்வாறான விளையாட்டு விழாக்கள் இங்கு தேவையில்லை.

மீறி அவ்வாறான ஒன்றை நடத்த முற்பட்டால் விளைவு விபரீதமாக இருக்கும்.

இது சிங்கள சகோதரர்களுக்கு எதிரான எச்சரிக்கையல்ல, நொந்து போன எம் உள்ளத்து வெளிப்பாடு என்று குறிப்பிட்டனர்.

மேற்படி பயிற்றுவிப்பாளர்கள் கருத்துக் கூறுகையில்;விளையாட்டுத் துறை அமைச்சின் பணிப்பிலேயே நாம் இங்கு வந்தோம். உண்மை நிலையை உரியவர்களுக்கு உடனடியாக வெளிப்படுத்துவோம்என்றனர்.

அதைத் தொடர்ந்து பி.ப.1.15 மணியளவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து .சென்றனர்.இதேவேளை மேற்படி விளையாட்டு விழா மக்களின் உணர்ச்சிகளுக்கு மாறானதோர் சூழ்ச்சித் திட்டம் எனக் குற்றமசாட்டி தமிழீழ விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழு அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(உ-4)

தற்கு முன்வந்ததையிட்டு தாம் மகிழ்ச்சி அடைந்தாலும் தமிழர் தாயகப் பிரதேசத்திற்கும் தமிழ் மக்களுக்கும் நன்மைகள் அளிக்கக்கூடிய வகையில் சர்வதேச சமூகம் செய்யும் உதவி எமது மக்களுக்குச் சரியான முறையில் வந்து சேரும் என்னும் உறுதிப்பாடு இல்லாத குழப்பமான சூழ்நிலை இருக்கிறது.

யுத்தத்தினால் சீரழிந்து போயுள்ள வடக்கு கிழக்குக் பிரதேசத்தில் உள்ள நிர்வாக கட்டமைப்புக்களை சீர்படுத்தி தமிழர் தாயகப் பிரதேசத்தில் அதிகாரமுள்ள உறுதியான நிர்வாகக் கட்டமைப்பை நிறுவிக் கொள்வதனால் எதிர்காலத்தில் சர்வதேச சமூகம் செய்கின்ற உதவிகள் சரியான முறையில் எமது தேசத்து மக்களுக்கு சென்றடையும்.

ஏற்கனவே நடைபெற்ற ஆறு சுற்றுப்பேச்சுகளின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் எமது மக்கள் நம்பிக்கையீனமும் விரக்தியும் அடைந்திருககின்றனர். இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர முடியாத நிலையில் ஏக்கத்தோடும் விரக்தியோடும் வாழ்கின்றார்கள்.எமது மக்கள் சுதந்திரமாக நடமாடி தமது தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு இன்னமும் பல தடைகள் இருந்து வருகின்றன.

### புரிந்துணர்வின் பின்னரும் இயல்பு வாழ்வு ஏற்படவில்லை

எமக்கும் அரசுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு 160 நாட்களுக்குள் இயல்பு நிலை வந்திருக்க வேண்டும் ஆனால அது இதுவரை ஏற்படாதது எமது மக்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தந்துள்ளது.இந்நிலையில் ஒரு நம்பிக்கையான சூழ்நிலை கட்டியெழுப்ப வேண்டுமானால் இந்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி மக்களுக்கு இருக்கின்ற நெருக்குவாரங்கள் நீங்கி இயல்பு நிலை ஏற்பட வேண்டும் .

வடக்குக் கிழக்கில் தமிழர் தாயகப்பிரதேசத்தை உள்ளடக்கிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை நிறுவிக் கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இது வழிவகுக்கும் என்பதை தூதுவருக்கு தெளிவு

அதைப் பெரிதுபடுத்துகிறார்கள். இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவினரை விரைவில் சந்திக்கவுள்ளோம்.

### பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் புதிய முகாம் தேவையில்லை

திருகோணமலையில் புதிய முகாம்கள் எதுவும் அமைக்கப்பட வேண்டிய தேவை எமக்கு இல்லை தமிழர் தாயகத்தின் பெரும்பாலான பகுதிகளை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.ஜே.வி.பி,சிஹல உறுமய போன்ற அமைப்புகளை கண்காணிப்புக்குழுவாக நியமித்திருக்கலாம். இவர்களே இப்பணிகளை செய்திருக்கலாம். நோர்வே யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு தேவையில்லை.

தமிழீழ தேசியக்கொடியை தமிழர் தாயகப்பகுதிகளில் ஏற்றுவது தொடர்பாக செய்தியாளர் ஒருவர் கேட்டதிற்கு தமிழீழ தேசியக் கொடியை ஏற்றுவது புதுமையானதொன்றல்ல தேசியக் கொடி ஏற்றப்படுவது எமது மரபாகும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததில் இருந்தும் அதற்கு முன்பும் தேசியக்கொடி ஏற்றும் நிகழ்வு நடைபெற்று வருகின்றது என்றும் தமிழ்செல்வன் கூறினார். (வ)

## இரத்ததானம்

ஸ்ரீ சத்திய சாயி பாபாவினால் இரத்ததான தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் இரத்ததான நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

டாக்டர் சிவசங்கரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் வைத்தியர்கள் கலந்து கொண்டனர்.

சாயி பக்தர்கள் உட்பட 55 பேர் நேற்றைய தினம் இரத்ததானம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-7)


THE ROYAL COLLEGE OF JAFFNA

SPOKEN ENGLISH மற்றும் GRAMMAR தனித்தனி பிரிவாக BY N.VIGNESWARAN ARCHERY

426(302)கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம்.

பிளாக் வீதி சங்கானை.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.